Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ


தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

21 முஹர்ரம் 1439 ஹிஜ்ரி கமரி 12 அஹா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

12 அக்டோபர் 2017


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இம்மக்களின் எண்ணத்தில் பொய்யனாகவும், இட்டுக்கட்டிக் கூறுபவனாகவும், தஜ்ஜாலாகவும் நான் இருக்கின்றேன். ஆனால், முபாஹலா செய்யும்போது இம்மக்களே மரணிக்கின்றனர். இது வியக்கத்தக்க விஷயமாக இருக்கின்றது. எவராவது இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியுமா என்ன?**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**எழுபத்தி ஒன்றாவது அடையாளம்:** சிர்ருல் கிலாஃபா என்ற எனது நூலின் 62 -வது பக்கத்தில் எந்த எதிரிகளின் பாக்கியத்தில் நேர்வழி இல்லையோ அத்தகைய எதிரிகளின் மீது பிளேக் நோயின் தாக்குதல் ஏற்படுவதற்காக நான் துஆ செய்திருந்தேன். அந்த துஆவிற்கு பல வருடங்களுக்குப் பிறகு இந்த நாட்டில் பிளேக் நோய் மிகைத்து காணப்பட்டது. அதனால் சில எதிரிகள் இவ்வுலகை விட்டே சென்று விட்டனர்.

அந்த துஆ இதுவாகும்:

وَخُذْ رَبِّ مَنْ عَادَى الصَّلَاحَ وَمُفْسِدًا وَ نَزِّلْ عَلَيْهِ الرِّجْزَ حَقًّا وَ دَمِّرِ

என் இறைவா! எந்த நபர் நல்வழி மற்றும் நற்பணிக்கு எதிரியாக இருக்கின்றாரோ, குழப்பத்தை ஏற்படுத்துகின்றாரோ அவரை பிடிப்பாயாக. அவர் மீது பிளேக் நோயின் தண்டனையை இறக்குவாயாக. அவரை அழித்து விடுவாயாக.

وَ فَرِّجْ كُرُوْبِيْ يَا كَرِيْمِيْ وَ نَجِّنِيْ وَمَزِّقْ خَصِيْمِيْ يَا اِلٰهِيْ وَ عَفِّرِ

என் மீது கருணை காட்டுபவனே! எனது நிம்மதியற்ற நிலைமைகளை அகற்றுவாயாக. துக்கங்களிலிருந்து எனக்கு இரட்சிப்பை வழங்குவாயாக. எனது எதிரிகளை துண்டு துண்டாக ஆக்கி விடுவாயாக. அவர்களை மண்ணோடு மண்ணாக ஆக்கி விடுவாயாக. இந்த நாட்டின் எந்த பகுதியிலும் பிளேக்கின் பெயரும் அடையாளமும் கூட இல்லாத சமயத்தில் இந்த முன்னிறிவிப்பு செய்யப்பட்டது. (எனது நூலான சிர்ருல் கிலாஃபாவை பாருங்கள்)

பிறகு எனது நூலான இஃஜாஸே அஹ்மதியில் இந்த முன்னறிவிப்பு இருக்கின்றது.

اِذَا مَا غَضِبْنَا غَاضَبَ اللّٰهُ صَائِلًا عَلٰى مُعْتَدٍ يُؤْذِيْ وَ بِالسُّوْءِ يَجْهَرُ

நாம் கோபப்படும்போது இறைவன் வரம்பு மீறி பகிரங்கமான தீமையை செய்ய முற்படுகின்ற அந்த நபர் மீது தனது கோபத்தை வெளிப்படுத்துகின்றான்.

وَيَأْتِيْ زَمَانٌ كَاسِرٌ كُلَّ ظَالِمٍ وَهَلْ يَهْلِكَنَّ الْيَوْمَ اِلَّا الْمُدَمَّرُ

மேலும், அந்த காலம் வந்து கொண்டிருக்கின்றது. அப்போது ஒவ்வொரு எதிரிகளையும் அவ்விறைவன் துண்டு துண்டாக்கி விடுவான். தங்களது பாவங்களின் காரணமாக அழிந்து விட்டவர்களே அழிந்து போவர்.

وَاِنِّيْ لَشَرُّ النَّاسِ اِنْ لَّمْ يَكُنْ لَّهُمْ جَزَاءُ اِهَانَتِهِمْ صَغَارٌ يُّصَغِّرُ

அவர்கள் எம்மை இழிவுபடுத்தியத்திற்கு தண்டனையாக அவர்கள் இழிபடுத்தப்படவில்லை என்றால் நான் எல்லா தீய மக்களை விடவும் மோசமானவனாக இருப்பேன்.

قَضَى اللّٰهُ اِنَّ الطَّعْنَ بِالطَّعْنِ بَيْنَنَا فَذٰلِكَ طَاعُوْنٌ اَتَاهُمْ لِيُبْصِرُوْا

அவர்கள் பழித்துறைத்ததற்குப் பதிலாக அவர்களும் பழித்துரைக்கப் -படுவர். அதே பிளேக் நோய்தான் அவர்களைப் பிடிக்கும்.

وَلَمَّا طَغَى الْفِسْقُ الْمُبِيْدُ بِسَيْلِهٖ تَمَنَّيْتُ لَوْ كَانَ الْوَبَاءُ الْمُتَبِّرُ

அழிவை ஏற்படுத்துகின்ற குழப்பம் எல்லையைக் கடந்து விட்டபோது இப்போது அழிக்கின்ற பிளேக் வர வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்.

அதற்குப் பிறகு اے بسا خانہ دشمن کہ تو ویران کردی என்ற இந்த இல்ஹாம் வந்தது. இந்த இல்ஹாம் அல் ஹகமிலும் அல் பத்ரிலும் வெளியிடப்பட்டது. எதிரிகள் கடுமையாக துன்பமிழைத்த பிறகு செய்யப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டிருந்த துஆக்கள் இறைவனின் சமுகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப பிளேக் நோயின் தண்டனை அவர்கள் மீது நெருப்பைப் போன்று பொழிந்தது. என்னைப் பொய்படுத்தி தீய சொற்களால் எனது பெயரைக் கூறுகின்ற பல்லாயிரக்கணக்கான எதிரிகள் அழிந்து விட்டனர். ஆனால், இந்த இடத்தில் நாம் முன்மாதிரியாக சில கொடிய எதிரிகளைப் பற்றி குறிப்பிடுகின்றோம்.

முதலாவது குறிப்பிடத்தக்கது அமிர்தசரசில் வசித்து வந்த ருஸுல் பாபா பற்றியதாகும். இவர் என்னை மறுக்கும் வகையில் ஒரு நூலை எழுதினார். மேலும், மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். சில நாட்களுக்கான இவ்வாழ்க்கையின் மீது நேசம் வைத்தவாறு பொய் கூறினார். இறுதியில் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப அவர் அழிந்து விட்டார்.

இவருக்குப் பிறகு பட்டாலாவின் டெப்டி இன்ஸ்பெக்டராக இருந்த முஹம்மது பக்ஷ் என்ற பெயரை உடைய ஒரு நபர் பகைமையுடன் நடந்து கொண்டவாறு துன்பமிழைப்பதில் தீவிரமாக இருந்து வந்தார். அவரும் பிளேக் நோயால் அழிந்து போனார்.

அதற்குப் பிறகு ஜம்முவைச் சார்ந்த சிராகுத்தீன் என்ற பெயரை உடைய ஒருவர் எழுந்தார். அவர், தான் தூதராக இருப்பதாக வாதம் செய்தார். அவர் எனக்கு தஜ்ஜால் என்று பெயர் வைத்தார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கனவில் எனக்கு ஒரு தடியை வழங்கினார்கள். அதன் மூலமாக இந்த தஜ்ஜாலை நான் அழிக்க வேண்டும் என்று கூறினார். குறிப்பாக அவரைப் பற்றிய ஒரு முன்னறிவிப்பு எனது நூலான ‘தாஃபிவுல் பலா வ மிஃயாரு அஹ்லில் இஸ்திஃபா’ -வில் அவரது வாழ்நாளிலேயே வெளியிடப்பட்டது. அந்த முன்னறிவிப்பிற்கேற்ப 4 ஏப்ரல் 1906 -ல் தனது இரண்டு மகன்களுடன் பிளேக் நோயால் இவர் அழிந்து விட்டார். எந்த ஈஸாவின் தடியினால் அவர் என்னைக் கொல்ல வேண்டியது இருந்ததோ அது எங்கே சென்று விட்டது? اِنِّیْ لَمِنَ الْمُرْسَلِیْنَ நிச்சயமாக நான் தூதர்களில் ஒருவனாக உள்ளேன் என்ற அவரது இல்ஹாம் எங்கே சென்று விட்டது? பெரும்பாலான மக்கள் அவர்களது ஆன்மா தூய்மையடைவதற்கு முன்பே மனதில் எழும் விஷயங்களை இல்ஹாம் என்று கூறுகின்றனர். இதனால் இறுதியில்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மஜ்லிஸே ஷூரா எதனை திட்டமிடுகிறதோ பல்வேறு கருத்துக்களை உடைய உறுப்பினர்களின் முன் அந்த பரிந்துரைகள் வருகின்றதோ அது அதன் பிறகு ஒரு கருத்தில் வந்து நிலை நிற்கிறது அல்லது உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் கருத்து நிலை நிற்கிறது. பிறகு அதனை செயல் வடிவம் தருவதற்காக ஒரு செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டு காலத்தின் கலீஃபாவிடம் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது. ஒப்புதல் கிடைத்து விட்டால் தமது எல்லா திறமைகள் மற்றும் ஆற்றல்களுடன் அதை செயல்படுத்துவதும் பிறரை அப்பணியை செய்ய வைப்பதும் மஜ்லிஸே ஷூராவின் உறுப்பினர்களுக்கும் அவசியமாகும். ஜமாஅத்தின் ஒவ்வொரு மட்டத்தின் பொறுப்பாளர்களுக்கும் இது பொறுப்பாகும்.

எந்த தீர்மானம் தப்லீகின் பணியை மேம்படுத்துவதற்கு அல்லது அதனை விரிவுபடுத்துவதற்கு பிரிட்டனின் மஜ்லிஸே ஷூராவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதோ அல்லது உலகில் எந்த ஒரு நாட்டிலாவது ஆலோசனை நடந்து அதனை காலத்தின் கலீஃபாவின் ஒப்புதலுக்குப் பிறகு செயல் வடிவம் தருவதற்காக ஜமாஅத்துகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதோ அதனை செயல்படுத்தவும் செயல்படுத்த வைக்கவும் ஒவ்வொரு மஜ்லிஸே ஷூராவின் உறுப்பினர் அல்லது ஒவ்வொரு மட்டத்தின் பொறுப்பாளரும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இந்த தீர்மானம் தப்லீக் சம்பந்தப்பட்டது; எனவே, தப்லீக் செயலர்தான் வேலை செய்வதற்கு பொறுப்பாளி என்று நினைக்காதீர்கள். அல்லது வேறு துறை சம்பந்தமான ஒரு தீர்மானம் என்றால் சம்பந்தப்பட்ட துறை செயலரே அதற்கு பொறுப்பாளி எனறு நினைக்க வேண்டாம்.

எந்தவொரு பொறுப்பாளரும் ஏதாவது ஒரு கோணத்தில் தப்லீகில் பங்கு பெற முடியும். பொறுப்பாளர் பங்கெடுக்கிறார் எனில் அதனால் ஜமாஅத் மக்களிடம் முன்மாதிரி நிலைநாட்டப்படும். அதிகமான அஹ்மதிகள் சிறப்பாக கவனமூட்டாமலேயே தாமே இந்த முன்மாதிரியின்படி இந்த செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை சென்று சேர்க்கும் முயற்சியில் இணைந்து விடுவர்.

தேசிய தப்லீக் செயலரின் பணி என்னவென்றால், எந்த செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதோ அதனை ஒவ்வொரு உள்ளூர் தப்லீக் செயலர் வரை கொண்டு சேர்க்க வேண்டும். பிறகு ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி மனிதர் வரை நிர்வாக சம்பந்தப்பட்டவை அல்லாமல் தனி நபர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அனைத்தும் முறையாக சென்று சேர்ந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

அந்நஹ்ல் அதிகாரத்தின் 126 -வது வசனத்திற்கு ஹுஸூர் அவர்கள் மிகவும் இறைஞானம் நிறைந்த விளக்கத்தைக் கூறினார்கள். இந்த வசனத்தின் ஒளியில் வெற்றிகரமான தப்லீகிற்கு வழிகாட்டுகின்ற அடிப்படையான விஷயங்களைப் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் தப்லீக் தொடர்பாக ஜமாஅத் சகோதரர்களுக்கு முக்கியமான போதனைகளை வழங்கினார்கள்.

அல்லாஹ் எல்லாவற்றுக்கும் முதலில் கூறிய கருத்து ஹிக்மத்துடன் (ஞானத்துடன்) தப்லீக் செய்ய வேண்டும் என்பதாகும். ஹிக்மத் என்பதற்குரிய பரந்த பொருள்கள் உள்ளன. வெற்றிகரமான தப்லீக் செய்வதற்கு நமக்கு அந்த பொருள்கள் தெரிந்திருக்க வேண்டும். அதன் மூலமே தப்லீகின்போது நாம் அப்பொருள்களைக் கவனத்தில் கொள்ள முடியும். நமது தப்லீக் பணிகளில் ஒரு தொடர்ச்சியை மேற்கொள்ள வேண்டும். வருடத்தில் ஓரிரு முறை பத்து நாள் தப்லீக் தினம் அல்லது தப்லீக் வாரம் கொண்டாடினோம். பாதைகளில் நின்று பிரசுரங்களை விநியோகித்து விட்டோம். இதனால் நமது தப்லீகின் கடமை நிறைவேறி விட்டது என்று நினைத்து விட்டோம் என்பதல்ல.

இறைவன் பக்கம் அழைக்கும் சிறப்பு அழைப்பாளர்கள் பெயரளவில் மட்டும் சிறப்பு அழைப்பாளராக இல்லாமல் இப்போது அதிகமான நேரம் செலவு செய்து தப்லீக் களத்திற்கு வர வேண்டும்.

---

தப்லீகிற்கு தனது நிலைமைகளில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். ஓர் உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியாக ஒரு மனிதன் ஆகும் போது பிறகு மக்களின் கவனம் ஏற்படவில்லையே என்ற கேள்விக்கே இடம் இருக்காது. முன்மாதிரியைப் பார்த்தே மக்கள் கவனம் செலுத்துகிறார்கள். இவ்வாறு முறையாக தப்லீகிற்கு முன்பாக அதற்கான வழி திறக்கிறது. அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**8 செப்டம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **8 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.
اُدْعُ إِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ أَحْسَنُ إِنَّ رَبَّكَ هُوَ أَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيْلِهِ وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِيْنَ

இந்த வசனத்தின் பொருள்: உமது இறைவனின் வழியில் ஞானத்துடனும் நல்ல போதனையுடனும் அழைப்பீராக. மிகச் சிறந்த சான்றுகளுடன் அவர்களுடன் விவாதம் செய்வீராக. வழிதவறியவர் யார் என்பதையும் உமது இறைவனே அறிவான். நேர்வழி பெறுபவர் யார் என்பதையும் அவனே நன்கறிந்தவன் ஆவான். **(16:126)**

உலகில் பல நாடுகளின் ஜமாஅத்துகள் மஜ்லிஸே ஷூராக்களில் (ஆலோசனைக் கூட்டங்களில்) தமது பரிந்துரையாக நன்கு விவாதித்து செயல் திட்டமாக ஒவ்வொரு ஜமாஅத்தின் மஜ்லிஸே ஷூராவும் எவ்வாறு நாம் தப்லீகின் பணியை இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகின் எல்லா மட்டத்திலும் கொண்டு செல்லும் பணியை விரிவுபடுத்துவது என்பதை எடுத்து வைத்துள்ளன. அல்லது இதனை விட நல்ல அடிப்படையில் எப்படி இதனை நிலைநாட்டுவது என்றும் எடுத்து வைத்துள்ளன. பிரிட்டனின் அஹ்மதிய்யா ஜமாஅத்தும் இவ்வருடம் மஜ்லிஸே ஷூராவின் பொருள் நிரலில் (அஜெண்டாவில்) இந்த பரிந்துரையை வைத்திருந்தது. அதனை மஸ்லிஸே ஷூரா மிக நன்றாக விவாதித்து தமது செயல் திட்டத்தை வடிவமைத்து எனது ஒப்புதலுக்காக அனுப்பியது.

ஆனால் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தப்லீகின் பணிக்கான திட்டமிடுவதாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதாவது பணிக்கான திட்டமிடுவதாக இருந்தாலும் சரி மஜ்லிஸே ஷூரா எதனை திட்டமிடுகிறதோ பல்வேறு கருத்துக்களை உடைய உறுப்பினர்களின் முன் அந்த பரிந்துரைகள் வருகின்றனவோ அது அதன் பிறகு ஒரு கருத்தில் வந்து நிலை நிற்கிறது அல்லது உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் கருத்து நிலை நிற்கிறது. பிறகு அதனை செயல் வடிவம் தருவதற்காக ஒரு செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டு காலத்தின் கலீஃபாவிடம் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது. ஒப்புதல் கிடைத்து விட்டால் தமது எல்லா திறமைகள் மற்றும் ஆற்றல்களுடன் அதை செயல்படுத்துவதும் பிறரை அப்பணியை செய்ய வைப்பதும் மஜ்லிஸே

ஷூராவின் உறுப்பினர்களுக்கும் அவசியமாகும். ஜமாஅத்தின் ஒவ்வொரு மட்டத்தின் பொறுப்பாளர் –களுக்கும் இது பொறுப்பாகும்.

ஆகவே, எந்த தீர்மானம் தப்லீகின் பணியை மேம்படுத்துவதற்கு அல்லது அதனை விரிவுபடுத்துவதற்கு பிரிட்டனின் மஜ்லிஸே ஷூராவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதோ அல்லது உலகில் எந்த ஒரு நாட்டிலாவது ஆலோசனை நடந்து அதனை காலத்தின் கலீஃபாவின் ஒப்புதலுக்குப் பிறகு செயல் வடிவம் தருவதற்காக ஜமாஅத்துகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதோ அதனை செயல்படுத்தவும் செயல்படுத்த வைக்கவும் ஒவ்வொரு மஜ்லிஸே ஷூராவின் உறுப்பினர் அல்லது ஒவ்வொரு மட்டத்தின் பொறுப்பாளரும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இந்த தீர்மானம் தப்லீக் சம்பந்தப்பட்டது; எனவே, தப்லீக் செயலர்தான் வேலை செய்வதற்கு பொறுப்பாளி என்று நினைக்காதீர்கள். அல்லது வேறு துறை சம்பந்தமான ஒரு தீர்மானம் என்றால் சம்பந்தப்பட்ட துறை செயலரே அதற்கு பொறுப்பாளி என்று நினைக்க வேண்டாம். நிச்சயமாக அதற்கு செயல் வடிவம் தருவதற்கு சம்பந்தப்பட்ட துறை செயலர் பொறுப்பாளர்தான். ஆனால் குறிப்பாக தப்லீக் மற்றும் தர்பிய்யத் துறை எத்தகையது எனில் ஜமாஅத்தின் ஒவ்வொரு மட்டத்தின் பொறுப்பாளரும் அதில் கலந்து கொள்வதும் தமது முன்மாதிரியைக் காட்டுவதும் அவசியமாகும்.

இப்போது நான் தப்லீக் சம்பந்தமாக பேச விரும்புவதால் இதன் அடிப்படையில் ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் கவனமூட்ட விரும்புகிறேன். அவர்கள் தமது தப்லீக் செயலர்கள் மூலம் இந்த தீர்மானத்தின்படி செயல்படுத்த வைப்பதற்காக முழுமையான ஒத்துழைப்பு நல்குங்கள். நீங்களே அதில் பங்கெடுத்துக் கொண்டு ஜமாஅத் மக்களுக்கு உங்கள் முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். எந்தவொரு பொறுப்பாளரும் ஏதாவது ஒரு கோணத்தில் தப்லீகில் பங்கு பெற முடியும். பொறுப்பாளர் பங்கெடுக்கிறார் எனில் அதனால் ஜமாஅத் மக்களிடம் முன்மாதிரி நிலைநாட்டப்படும். அதிகமான அஹ்மதிகள் சிறப்பாக கவனமூட்டாம –லேயே தாமே இந்த முன்மாதிரியின்படி இந்த செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை சென்று சேர்க்கும் முயற்சியில் இணைந்து விடுவர். சில செயலர்களுக்கு அவர்களது துறையில் அவ்வளவு வேலை இருக்காது. அவர்கள் இதற்காக அதிக நேரம் செலவிட முடியும். எண்ணமும் விருப்பமும் மட்டுமே தேவையாகும்.

எவ்வாறிருப்பினும், தேசிய தப்லீக் செயலரின் பணி என்னவென்றால், எந்த செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதோ அதனை ஒவ்வொரு உள்ளூர் தப்லீக் செயலர் வரை கொண்டு சேர்க்க வேண்டும். பிறகு ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி மனிதர் வரை நிர்வாக சம்பந்தப்பட்டவை அல்லாமல் தனி நபர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அனைத்தும் முறையாக சென்று சேர்ந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும். ஆனால் நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் நமக்கு வழிகாட்டியுள்ளதை புரிந்து கொள்ளுங்கள். அதன்படி ஒவ்வொரு தப்லீக் செயலரும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளரும் செயல்பட வேண்டும். இறைவன் பக்கம் அழைக்கும் சிறப்பு அழைப்பாளர்கள் செயல்பட வேண்டும். சிறப்பு அழைப்பாளர்களை நான் குறிப்பாக கூறக் காரணம் அவர்கள் தம்மைத் தாமே இதற்காக அர்ப்பணித்துள்ளனர். மற்ற ஜமாஅத்துகளை விட அதிகமாக நாங்கள் தப்லீகிற்கு அதிக நேரம் தருவோம் என்று கூறியுள்ளார்கள். அவர்கள் தமது நேரத்தையும் தந்து அவர்களுக்கு அறிவு இருந்தும் அல்லாஹ் இந்த வசனத்தில் கூறியுள்ள விஷயத்தில் அவர்களின் கவனமில்லை என்றால் பரக்கத்தும் இருக்காது. மிகச் சிறந்த விளைவையும் உருவாக்க இயலாது; அல்லது வெளிப்படாது. அல்லாஹ் இந்த வசனத்தில் கூறியுள்ள கருத்து முதலில் ஹிக்மத் மற்றும் அழகிய போதனையாகும்.

பிறகு மிகச் சிறந்த சான்றுகளை எடுத்து வையுங்கள் என்று அல்லாஹ் கூறினான். தற்கால பெயர் தாங்கி ஆலிம்களும், தீவிரவாத குழுக்களும், அமைப்புகளும் தமது பைத்தியக்காரத்தனமான ஞானமில்லாத அறிவும் சான்றும் இல்லாத கருத்துக்களால் இஸ்லாத்திற்கு எந்த அளவுக்கு அவப்பெயர் ஏற்படுத்தி விட்டார்கள் என்றால் முஸ்லிம் அல்லாத உலகம், இஸ்லாம் ஞானமற்ற சான்றுகளற்ற மார்க்கம், அறிவற்ற முட்டாள் தனமான மார்க்கம் என்று கருதுகின்றனர். (நவூதுபில்லாஹ்) வெறும் தீவிரவாதம் மட்டுமே அதன் போதனை என்று கருதுகின்றனர். அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலின்படி நாம் தப்லீக் செய்வதும் தொடர்பு கொள்வதும் ஒவ்வோர் அஹ்மதியின் பொறுப்பாகும். ஆகவே, இந்த முக்கியத்துவத்தை எல்லாருக்கும் முதலில் பொறுப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஓரிரு ஆண்டுகளில் இந்த தீவிரவாதிகள் மற்றும் சில ஆலிம்களின் செயல்கள் இஸ்லாத்திற்கு எத்தகைய அவப்பெயரை ஏற்படுத்தி விட்டது. ஊடகங்கள் அதனை எந்த அளவுக்கு மிகைப்படுத்தின என்றால் இங்கு கடந்த நாட்களில் ஒரு சர்வே நடந்தது. அதில் இஸ்லாம் ஒரு கடுமை காட்டும் மார்க்கம் மற்றும் அநீதி இழைக்கக் கூடியது என்றும், முஸ்லிம்கள் விரும்பத்தகாதவர்கள் என்ற கோணத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது பெரும்பாலார் இவ்வாறு தான் பதிலளித்தனர். இஸ்லாம் ஒரு கடுமையை விரும்பும் மார்க்கம் என்றும் முஸ்லிம்கள் விரும்பத்தகாதவர்கள். எமது நாட்டில் முஸ்லிம்கள் வசிப்பதை நாங்கள் விரும்பவில்லை. இவர்கள் நாட்டிற்கு நஷ்டம் இழைப்பவர்கள் என்றே பதிலளித்துள்ளனர்.

ஆனால் இதற்கு சில வருடம் முன் இந்த சர்வே நடத்தப்படும்போது பெரும்பாலாரின் கருத்து இதற்கு முற்றிலும் மாற்றமானதாக இருந்தது. அப்போது பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களை நல்லவர்கள் என்றே கருதினர். அத்தகைய சூழ்நிலையில், எந்த அளவுக்கு நாம் உழைத்து அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைப்படி உழைத்து அல்லாஹ் கூறியுள்ள வழிமுறையின்படி தப்லீக் செய்ய வேண்டும் என்பதை நாம் மதிப்பிட வேண்டும். அல்லாஹ் எல்லாவற்றுக்கும் முதலில் கூறிய கருத்து ஹிக்மத்துடன் (ஞானத்துடன்) தப்லீக் செய்ய வேண்டும் என்பதாகும். ஹிக்மத் என்பதற்குரிய பரந்த பொருள்கள் உள்ளன. வெற்றிகரமான தப்லீக் செய்வதற்கு நமக்கு அந்த பொருள்கள் தெரிந்திருக்க வேண்டும். அதன் மூலமே தப்லீகின்போது நாம் அப்பொருள்களைக் கவனத்தில் கொள்ள முடியும்.

**ஹிக்மத் என்பதன் ஒரு பொருள்**, அறிவு என்பதாகும். தப்லீக் செய்வதற்கு அறிவு இருக்க வேண்டும். ஒரு சிலர் நமக்கு சாக்குப்போக்குகள் கிடைத்து விட்டன. எங்களிடம்தான் தப்லீக் செய்வதற்குரிய அறிவு இல்லையே என்று கூறுகின்றனர். இக்காலத்தில் இந்த சாக்கும் ஒரு காரணமாக முடியாது. அறிவு ரீதியாகவும் நம்மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அருள் செய்து விட்டார்கள். ஜமாஅத்தின் படைப்புகளின் அதற்கான அறிவுகள் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளன. சாதரண முயற்சியினால் கூட நமக்கு கணிசமான அளவுக்கு அவை அறிவு முத்துக்களை வழங்கி விடுகின்றன. பிறகு இணைய தளங்கள் உள்ளன. பெரும்பாலானவர்களுக்கு நாம் தூதுச் செய்தியை அவர்களிடம் கொண்டு சேர்க்கிறபோது எம்மிடம் இப்போது நீண்ட விவாதம் செய்வதற்கு நேரமில்லை என்று கூறி விடுகின்றனர். அவர்களுக்கு நாம் பிரசுரங்கள் கொடுக்கலாம். இணையதளத்தில் தந்தால் ஆர்வமுள்ளவர்கள் பெரும்பாலார் அதில் ஆர்வமாகவே இருக்கின்றனர். அவர்களுக்கு உடனே நேரம் தர முடியா விட்டால் பிறகு அவர்கள் அது குறித்து தெரிந்து கொள்கின்றனர். பலர் என்னிடம் அவர்களாகவே வந்து கூறுவும் செய்தனர். இவ்வாறு நாங்கள் தெரிந்து கொண்டோம் என்கின்றனர். ஒன்று முதலில் நமது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதன் மூலம் எவருடன் அறிவுப்பூர்வமாக பேச வேண்டியதுள்ளதோ அதே அளவுக்கு தரத்துடன் பேச முடியும். இரண்டாவது நமது வெப்சைட்டில் எங்கு அறிவு ரீதியான பதில் கிடைக்கும் என்று நமக்கு தெரிந்திருக்க வேண்டும். பல்வேறு மார்க்கத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களுடனும் இறை இருப்பை மறுப்பவர்களுடனும் அவர்களின் எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப அவர்களுக்கு ஏற்ற சான்றுகளுக்கு ஏற்ப நாம் சான்றுகளை தர வேண்டியதிருக்கிறது.

பிறகு **ஹிக்மத் என்பது உறுதியான கருத்து** என்பதாகும். அந்த சான்றை நிரூபிப்பதற்காக நமக்கு வேறு ஒரு சான்று தேவைப்படாதது; வேறு ஒன்றின் மூலம் மேலும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லாதது. ஆகவே நீண்ட விவாதம் செய்வதற்குப் பதில் ஆய்வு செய்து அவர்களின் ஆட்சேபனையைப் பார்த்து பிறகு அவர்களுக்கு வலுவான சான்று மூலமாக அதனை மறுக்க முயற்சி செய்ய வேண்டும். பிறகு இதுவும் தப்லீக் துறையின் பணியாகும். அவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப, அவர்களின் ஆட்சேபனையை மறுக்கும் ஆதாரங்களை ஒவ்வொன்றாகத் திரட்டி பிறகு ஜமாஅத்திற்கு அதனை கிடைக்கச் செய்ய வேண்டும். அதன் மூலம் நிறைய பேருக்கு அறிவுப்பூர்வமான வலுவான ஆதாரங்களை அவர் தம் ஆட்சேபனை –களுக்கு மறுப்பாக கிடைக்கச் செய்ய முடியும்.

பிறகு **ஹிக்மத் என்பதன் ஒரு பொருள் நீதி** என்பதாகும். ஒரு விவாதம் நடக்கும்போது மறு தரப்பின் மீது ஆட்சேபனை செய்யும்போது அதுவே திரும்பி நமக்கு எதிராகவும் நிற்கலாம். அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய படைப்புகளின் காரணத்தாலும் கலீஃபாக்களின் படைப்புகளின் காரணத்தாலும் பொதுவாக அவ்வாறு நடப்பதில்லை. ஆனால் பிற முஸ்லிம் அல்லது பிற மார்க்கத்தவரிடம் இவ்வாறு நடப்பதைக் காண முடிகிறது. முஸ்லிம்கள் நமக்கு எதிராக உள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எத்தகைய ஆட்சேபனைகள் எடுத்து வைக்கிறார்களோ அவற்றை பிற நபிமார்களின் மீதும் எடுத்து வைக்க முடியும். பெரும் பெரும் மக்கள் தமது வட்டத்தில் தம்மையே பெரும் ஆலிம் என்று கருதிக் கொள்கின்றனர். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எத்தகைய ஆட்சேபனையைச் செய்கிறார்கள் எனில் அது மற்ற நபிமார்கள் மீதும் ஏற்படுகிறது. இவ்விஷயத்திலும் தப்லீக் துறை ஆட்சேபனைகளையும் அதன் பதிலையும் ஒன்று திரட்ட வேண்டும். அதனை ஜமாஅத்திற்கு கிடைக்கச் செய்யவும் வேண்டும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் இருந்து நடக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அப்போதிருந்ததே அவர்களின் ஆட்சேபனைகளை நூல்களில் அல்லது அவர்களின் ஆகமங்களில் இருந்து முஸ்லிம் அல்லாதவர் –களிடமும் அதே போன்று முஸ்லிம்களிடமும் கூறினார்கள். நீங்கள் எதனை ஆட்சேபனை செய்கிறீர்களோ அது உள்ளபடியே ஆட்சேபனையே அல்ல. இஸ்லாத்தின் மீது மறுப்பவர்களின் தரப்பிலிருந்து இதே விதமான ஆட்சேபனை செய்யப்பட்டது. அதையே நீங்களும் செய்கின்றீர்கள் என்று கூறினார்கள். தப்லீக் துறை நான் கூறியது போன்று அதுபோன்ற ஆட்சேபனைகளை (அதற்குரிய பதில்களுடன்) பிரசுர வடிவில் அச்சிட்டு அதனை மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். அதிகமதிகம் மக்களை இப்பணியில் ஈடுபடுத்த வேண்டும். இந்த உழைப்பை இந்த துறை செய்ய வேண்டும். இதற்காக செலவு செய்ய வேண்டியதும் வரும்.

அது போன்று **ஹிக்மத் என்பதன் பொருள் சகிப்புத்தன்மை மற்றும் மென்மை** என்பதாகும். தப்லீகில் மென்மை மற்றும் அறிவைப் பயன்படுத்துவது மிக மிக தேவையான ஒன்றாகும். கோபம் மற்றும் வேகத்துடன் பேசுவதால் எதிர்மறை தாக்கமே ஏற்படுகிறது. ஆதாரம் எதுவும் இல்லை. எனவேதான் கோபத்துடன் பதில் தரப்படுகின்றது என்று கருதுகின்றனர். எவர் கோபத்தைக் காட்டுகிறாரோ அவருடன் கூட மென்மையுடன் தான் பேச வேண்டும். இஸ்லாமிய போதனையின் மீது ஆட்சேபனை செய்பவருக்கு இந்த பெயர் தாங்கி ஆலிம்களின் தீவிரவாதம் மட்டும்தான் வாய்ப்பு தருகிறது. அது அல்லாமல் அவர்களிடம் அமைதியாகப் பேசினால் நிறைய ஆட்சேபனைகள் அப்படியே முடிந்து போய் விடுகிறது.

பிறகு **ஹிக்மத் என்பதற்கு ஒரு பொருள் நுபுவ்வத்** என்பதாகும். இதன் அடிப்படையில் விவாதம் செய்வது ஆதாரம் தருவது என்பதன் பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது இறங்கிய திருக்குர்ஆன் மற்றும் அதன் போதனைகளுக்கு ஏற்ப நமது ஆதாரங்கள் இருக்க வேண்டும். இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் மற்றும் ஆட்சேபனை செய்பவர்களினால் தாக்கத்திற்கு ஆளானவர் –களிடம் திருக்குர்ஆனின் வசனங்களின் ஒளியில் பேசும்போது அவர்களிடம் நல்ல தாக்கம் ஏற்படுவதை நான் பார்த்துள்ளேன்.

பிறகு **இதற்கு இன்னொரு பொருள் அறியாமையை தடுத்தல்** என்பதாகும். ஆகவே, நாம் பேசும் முறை அடுத்தவரிடம் எளிதாகப் புரிய வேண்டும். அவர்களின் அறியாமை அகல வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் புரிந்து கொள்ளும் திறமைக்கு ஏற்ப பேசுங்கள் என்று வழிகாட்டியுள்ளார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 10 கிதாபுல் இல்மி மின் கஸ்மில் அக்வாலி பக்கம் 105 ஹதீஸ் 29468. பைருத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் 2004 -ல் அச்சிடப்பட்டது)

பிறகு **அதற்கு இதுவும் ஒரு பொருளாகும். உண்மைக்கு ஏற்பவும் இணக்கமாகவும் பேச வேண்டும்.** எப்போதும் உண்மையான சம்பவங்களுக்கு ஏற்ப பேச வேண்டும். மற்றவரிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக உண்மையான சம்பவத்திலிருந்து விலகி பேசக் கூடாது. உண்மைக்கு மாற்றமான பேச்சுகள் தவறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் ஏதாவது ஒரு வேளையில் அசல் விஷயம் வெளிப்படுகிறது. எனவே எப்போதும் உண்மைக்கு ஏற்ப பேச வேண்டும்.

பிறகு **இடம் சூழ்நிலைக்கேற்ப பேசுவதற்கும் ஹிக்மத்** என்று பெயர். ஒரு சான்றை எடுத்து வைப்பதன் மூலம் கோபமும் எரிச்சலும் அடைவதற்கான ஆபத்து இருக்கும் எனில் அதனால் சண்டை சச்சரவு ஏற்பட்டு இடைவெளி அதிகமாகும் ஆபத்து இருக்கும் எனில் பிறகு அத்தகைய ஆதாரத்திலிருந்து தவிர்ந்து விட வேண்டும். பிறகு எத்தகைய ஆதாரம் தர வேண்டும் எனில் அது இடத்திற்கு பொருத்த –மாகவும் இருக்க வேண்டும். மற்றவரின் இயல்புக்கு ஏற்ற மாதிரியும் இருக்க வேண்டும். இடைவெளியை அதிமாக்குவதற்குப் பதில் அருகில் கொண்டு வருவதாக அவை இருக்க வேண்டும். சிலர் ஒரு விஷயத்தைக் கூறுகின்றனர். மற்றவர் அதனைக் கேட்டு நல்ல தாக்கத்தைப் பெறுகிறார். ஆனால் பேசி விட்டு அமைதியாவதற்குப் பதிலாக பிறகு சந்தர்ப்பம் கிடைத்தால் பேசலாம் என்று யோசித்து அமைதியாக இருப்பதற்குப் பதில் அதே சபையிலேயே அம்மனிதரை துரத்தத் தொடங்குகின்றனர். மீண்டும் மீண்டும் தமது பேச்சை எடுத்து வைக்கின்றனர். இன்று என் கருத்தை ஏற்றுக் கொண்டே நீர் எழ வேண்டும் என்று அவரை ஒப்புக் கொள்ள வைக்க முயற்சி செய்கின்றனர். இதனால் மறு தரப்பு எரிச்சல் அடைகின்றனர். அருகில் வந்தவரும் பிறகு விலகி விடுகிறார். முதலில் கூறிய கருத்தினால் ஏற்பட்ட தாக்கமும் வீணாகிப் போய் விடுகிறது. எனவே இடம், சூழ்நிலை, ஒருவரின் இயல்பு அறிதல் ஆகியவையும் கூட தப்லீக் செய்வதற்கு மிகவும் அவசியமாகும். தப்லீகில் நிரந்தரமான ஓர் இயல்பு அவசியமான அதே நேரத்தில் தனிப்பட்ட தொடர்பு கொள்வதும் அவசியமாகும் என்பதையும் இது எதிர்பார்க்கிறது. தனிப்பட்ட தொடர்பு கொள்வதன் மூலமே ஒருவரது இயல்பை தெரிந்து கொள்ள முடியும். எனவே நமது தப்லீக் பணிகளில் ஒரு தொடர்ச்சியை மேற்கொள்ள வேண்டும். வருடத்தில் ஓரிரு முறை பத்து நாள் தப்லீக் தினம் அல்லது தப்லீக் வாரம் கொண்டாடினோம். பாதைகளில் நின்று பிரசுரங்களை விநியோகித்து விட்டோம். இதனால் நமது தப்லீகின் கடமை நிறைவேறி விட்டது என்று நினைத்து விட்டோம் என்பதல்ல.

தற்போது இங்கு அசைலம் (புகலிடம்) பெறுபவர்கள் பல்வேறு வயதையுடையவர்கள் வந்துள்ளனர். உடல் நலம் பெற்ற இளைய வயதினரும் வந்துள்ளனர். சிலர் சிறிது பெரிய வயதில் உள்ளனர். அவர்களின் கேஸில் தீர்ப்பு வரும் வரை அவர்களில் பெரும்பாலார் ஓய்வாகவே உள்ளனர். அத்தகைய எல்லா மக்களும் அவர்களின் உடல் நலத்தின் அடிப்படையில் தப்லீகிற்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும். படைப்பு(Literature)களை (விநியோகிப்பதற்காக குறைந்த அல்லது அதிகமான நேரத்தை தர வேண்டும். மொழி தெரியாவிட்டால் பிரசுரங்களை எடுத்துச் செல்லுங்கள்; கேசட்டுகள் எடுத்துச் செல்லுங்கள். பாதையில் பிரசுரங்களை விநியோகிக்க வேண்டும். பிறகு பிரசுரங்களை வழங்குவதற்கு நிரந்தரமான ஒரு நிகழ்ச்சியும் இருக்க வேண்டும். இந்த அசைலம் (புகலிடம்)


**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். (22:31)*

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) கண், காது, மனம் இவையெல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நீங்கள் சாட்சியத்தை ஒருபோதும் மறைக்கக் கூடாது. அதை மறைப்பவரின் உள்ளம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகிறது. (2:284)**

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

வாங்குபவர்கள் இதற்காக பயன்பட முடியும். இதனால் நற்கூலியும் நன்மையும் கிடைக்கிறது. தப்லீகின் கடமையும் நிறைவேறும். அதன் பரக்கத்தால் அவர்களின் கேஸூம் சரியாகி விடலாம். நிரந்தரமான தப்லீகிற்காக செல்ல வேண்டும். அவர்களிடம் பிரசுரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். இவை அனைத்தும் ஹிக்மத் –ன் பொருளாகக் கூறப்பட்டுள்ளது. இதில் பொறுப் பாளர்களும் பங்கெடுக்க வேண்டும். ஏற்கனவே வசிப்பவர்களும் பங்கெடுக்க வேண்டும். அசைலம் (புகலிடம்) தேடுபவர்களுக்காக நான் கூறியுள்ளேன். எனவே அவர்கள்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. அடுத்து சிறப்பு அழைப்பாளர்கள் பெயரளவில் மட்டும் சிறப்பு அழைப்பாளராக இல்லாமல் இப்போது அதிகமான நேரம் செலவு செய்து தப்லீக் களத்திற்கு வர வேண்டும். உலகில் நிலைமையை இன்று நாம் உலகிற்கு கூறுவதற்கு நிலைமை இவ்வாறு உள்ளது. இவை அனைத்தும் நீங்கள் உலக ஆதாயத்தில் மூழ்கியதன் காரணமாக ஏற்பட்டுள்ளது என்றும், அல்லாஹ்வின் கோபத்தினால் ஏற்படுகின்றது என்றும், இதற்கு ஒரே வழிதான் உள்ளது. அல்லாஹ்வின் பக்கம் வந்து விடுங்கள். உண்மையான மார்க்கத்தை தேடுங்கள் என்று திறந்து கூறுவதற்கு வர வேண்டும். மவ்இஸத்துல் ஹஸனா என்ற தப்லீக் செய்யுமாறு இடப்பட்ட கட்டளையில், ஞானதத்துடன் தப்லீக் செய்வதும் வந்து விட்டது. அதாவது மென்மையும் உள்ளத்தில் தாக்கம் ஏற்படும் வகையிலும் தப்லீக் செய்ய வேண்டும்.

எனவே, அல்லாஹ் ஞானம், நல்ல போதனை, வலுவான ஆதாரங்கள் மூலமாக தப்லீக் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளான். அதற்கேற்ப நடப்பது நமது பணியாகும். நிரந்தரத் தன்மையுடன் இதனை செய்து கொண்டே செல்வது நமது பணியாகும். இதன் விளைவை நான் உருவாக்குவேன் என்று அல்லாஹ் கூறுகிறான். எவர் வழிதவறிக் கிடப்பார்; எவர் நேர்வழி பெறுவார் என்பது அல்லாஹ்வின் அறிவில் உள்ளதாகும். இன்னோரிடத்தில், 'நீங்கள் பலவந்தமாக எவருக்கும் நேர்வழி தந்து விட முடியாது' என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஆயினும், உங்கள் பணி தப்லீக் செய்வதாகும். தூதுச் செய்தியை கொண்டு சேர்ப்பதாகும். உண்மையின் தூதுச் செய்தியை உலகின் ஒவ்வொருவர் வரை கொண்டு சேர்ப்பதாகும். இஸ்லாத்தின் பெருமை மற்றும் அழகிய போதனையை மற்றவரிடம் வெளிப்படுத்துவதாகும். இதனை செய்து வாருங்கள். மனிதன் மறைவானவற்றை அறிந்தவனல்ல. நான் எவரிடம் பேசுகின்றேனோ அவரிடம் தாக்கம் ஏற்பட வேண்டும்; என் நேரம் வீணாகக் கூடாது என்று கூறக் கூடாது. எவரிடம் தாக்கம் ஏற்படும் என்று மனிதனுக்கு தெரியாது. 'எவர் மீது தாக்கம் ஏற்படும்; எவர் மீது ஏற்படாது என்ற அந்த அறிவு உமக்கு தரப்படவே இல்லை' என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே அல்லாஹ்வின் அந்த வழிகாட்டலுக்கு ஏற்ப நாம் விளைவுக்கு பொறுப்பாளிகள் அல்ல. ஏன் இவர்களின் விஷயத்தில் நல்ல விளைவு ஏற்படவில்லை? ஏன் நமது தப்லீகினால் 100 சதவீதம் தாக்கம் ஏற்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்கள் உருவாகவில்லை? என்பதற்கு நாம் பொறுப்பாளி அல்ல. நம்மிடம் கேட்கப்படுவது இவ்வளவு மட்டுமே. நாம் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்த்தோமா? ஏன் நாம் தப்லீகின் கடமையை நிறைவேற்றவில்லை? ஏன் அல்லாஹ்வின் வழிகாட்டலின்படி அமல் செய்யவில்லை? என்பது மட்டுமே. எவர் நேர்வழி பெறப்போகிறார்? எவர் நேர்வழி பெறப் போவதில்லை? என்பது அல்லாஹ்வின் அறிவில் மட்டுமே உள்ளது. நாம் நமது கடமையை நிறைவேற்றுகிறோம் எனில் உலகம் அல்லாஹ்விடம் மரணத்திற்குப் பிறகு எங்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தி கிடைக்கவே இல்லை என்று குறைந்தபட்சம் கூற முடியாமல் போகும். எங்களுக்கு இஸ்லாத்தின் போதனையே கிடைக்கவில்லை. எங்கள் மீது என்ன தவறு? என்று அது கேட்க முடியாது. சிலர் தூதுச் செய்தியைக் கேட்கின்றனர்; புரிகின்றனர். பிறகு துரதிஷ்டவசமாக ஒரு தடங்கல் வந்து விடுகிறது. பிறகு ஏற்றுக் கொள்ளாமல் போய் விடுகின்றனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாட்டின் முபல்லிக் எனக்கு எழுதினார். ஜெர்மனியில் சிலர் இன்னின்னவர்களெல்லாம் உங்களை சந்தித்தார்கள். மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். தப்லீக் மற்றும் முழு சுற்றுச்சூழல் அவரிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. பலமுறை பைஅத் செய்வதற்காக விருப்பம் தெரிவித்தார். பிறகு ஏதாவது ஒரு தடை வந்து விடுகிறது என்று எழுதியுள்ளார். ஒருவருக்கு ஒப்புக் கொள்வதற்க வாய்ப்பு கிடைக்குமா கிடைக்காதா என்று அல்லாஹ்வுக்கு தான் தெரியும். எவ்வாறிருப்பினும், நாம் நமது கடமையை நிறைவேற்றி விட்டோம். நாம் அவருக்கு இஸ்லாமிய போதனை குறித்து ஒளியூட்டி விட்டோம். பிறகு இது தொடர்பாக இன்னொரு விஷயத்தையும் சிலர் கேட்கின்றனர். நீங்கள் தப்லீக் செய்து எத்தனை அஹ்மதிகளை உருவாக்கியுள்ளீர்கள்? என்று கேட்கின்றனர். பிறகு இதுவும் கூறுகின்றனர். முஸ்லிம்கள் உங்களை முஸ்லிம்களாகக் கருதுவதில்லை. நீங்கள் இவ்வாறு தப்லீக் செய்து இஸ்லாம் உலகில் பரவுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும்? என்று கேட்கின்றனர். அத்துடன் இதனையும் ஒப்புக் கொள்கின்றனர். அதாவது வெளிப்படையாக உங்கள் கருத்துக்கள் ஆக்கப்பூர்வமானவை –யாகவும் ஞானம் நிறைந்தவையாகவும் உள்ளன என்று என்னிடமும் பலர் கூறுகின்றனர். பல்வேறு இடங்களில் கேட்கவும் செய்கின்றனர்.

ஜெர்மனி பயணத்திலும் ஒரு பத்திரிகையாளர் என்னிடம் கேட்டிருந்தார். எப்போதுமே நமது பதில் இதுவாகவே இருந்தது. எங்களுக்கு தப்லீக் செய்யுமாறும் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்குமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது. அதிலிருந்து நாங்கள் பின்வாங்குபவர்கள் அல்ல. பின்வாங்கவும் மாட்டோம். நாங்கள் எங்களது வேலையைச் செய்து கொண்டேதான் செல்வோம். எவர் நேர்வழியைப் பெறப் போகிறார்? எவர் நேர்வழியைப் பெறப்போவதில்லை? என்பது அல்லாஹ்வுக்குதான் தெரியும். எங்களிடம் உள்ள பொறுப்பை நாங்கள் செய்ய வேண்டும். அத்துடன் அல்லாஹ்வின் வாக்குறுதி இதுவாகும். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் மட்டுமே வெற்றி பெறுவார்கள் – இன்ஷா அல்லாஹ். எனவே நாங்கள் இந்த நம்பிக்கையில் உறுதியாக நிலை நிற்கிறோம். ஒருநாள் பெரும்பான்மை எமக்குரியதாகி விடும் – இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் நான் ஓதிய வசனத்திற்கு விளக்கம் அளித்துள்ளார்கள். எவ்வாறு இஸ்லாத்தின் எதிரிகள் அன்னாரின் உணர்வை காயப்படுத்த முயன்றுள்ளார்கள் என்பதையும், அன்னார் இந்த வசனத்தின்படி செயல்பட்டவாறு எவ்வாறு அமைதியை அழித்து சண்டை அதிகமாவதை தடுப்பதற்காக தமது நடைமுறையைக் காட்டினார்கள் என்பதைக் குறித்து கூறியுள்ளார்கள். இறைவன் அறிகிறான். நாம் பதில் சொல்லும்போது மென்மையைக் கைநழுவ விட்டதில்லை. அதாவது ஒருபோதும் மென்மையான நாவை பயன்படுத்துவதை விட்டதில்லை. எப்போதும் நாம் மென்மை மற்றும் மிருதுவான வார்த்தைகளைப் பயன்படுத்தினோம். எதிரிகளின் தரப்பிலிருந்து மிக அதிகமாக மோசமான முறையில் குழப்பத்தை ஏற்படுத்தும் திட்டத்தைப் பார்த்த போது, சீர்திருத்தத்திற்காக அதே அளவு கடுமையை நாம் மேற்கொண்டோம். எதிரிகள் அல்லது தீய ஆலிம்கள் பொதுமக்களையும் குழப்புகிறார்கள். அவர்கள் எழுதிய அளவுக்கு


**திருக்குர்ஆனிலிருந்து...**

நேர்மையிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். (5:3)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நெருங்கிய உறவினர், ஏழை, வழிப்போக்கர் ஆகியவர்களுக்குரியதைக் கொடுத்து விடுவீராக. மேலும், எவ்வகையிலும் வீண் விரயம் செய்யாதீர். (17:27)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும்போது அளவை முழுமையாகக் கொடுங்கள். மேலும் (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) நேரான தராசு கொண்டு (சரியாக) நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

எழுத்துக்களை அன்னாரும் எழுதினார்கள். அதன் மூலம் சமுதாயம் தமது காட்டுமிராண்டித்தனமான எழுச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக அவ்வாறு செய்தோம். அதுவும் எதற்காக எனில் முஸ்லிம்களுக்கு எதிராக செயல்பட்டார்கள். எவ்வளவு கடுமையாக பதில் தர முடியுமோ அவ்வளவு தந்தார்கள். அதனை விட அதிகமாக எழுச்சியைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. நெருக்கடியும் குழப்பமும் ஏற்படத்தக்க அளவில் காட்டுமிராண்டித்தனமான நிலையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அவர்கள் கூறினார்கள்: இந்த கடுமை எந்த மன ஆவேசத்தினாலோ கோபத்தினாலோ அல்ல. மாறாக, ஜாதில்ஹும் பில்லதீ ஹிய அஹ்ஸன் என்ற வசனத்தின்படி செயல்பட்டு ஞானத்துடன் செயல்படுவதற்காக அதாவது ஒரு நேரத்தில் கடுமையைக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டாலும் அதுவும் இந்த வசனத்தின் கீழ்தான் அது வருகிறது. செயலளவில் ஞானத்தை வெளிப்படுத்துவதற்காக செய்யப்பட்டது. சரியான முறையில் பேச வேண்டும். சூழ்நிலைக்கேற்ப இருக்க வேண்டும். எனவே எதிரிக்கு இந்த முறையில் பதில் தருவதும் அவசியமாகும். ஆனால் பொதுவாக மென்மை தான் காட்ட வேண்டும்.

அவர்கள் கூறினார்கள்: ஞானத்துடன் செயல்படுவதை வெளிப்படுத்துவதற்காக இது செய்யப்பட்டது. அதுவும் கூட அப்போது எதிரியின் இழிவுபடுத்தலும், வசைமொழிகளும் அளவு கடந்து விட்ட நிலையில், நமது பிரபஞ்சங்களின் தலைவரும் அனைவரின் பெருமிதத்திற்குரியவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் தீங்கும் அசுத்தமும் நிறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி அதனால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் நிலை ஏற்பட்டபோது நாம் இவ்வாறு ஞானத்துடன் செயல்படுவதை நடைமுறைப்படுத்தினோம். (அல் பலாக். ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 385) ஆகவே அத்தகைய நிலையில் ஜாதில்ஹும் பில்லதீ ஹிய அஹ்ஸன் என்பதன் பொருள், ஓரளவு கடுமை காட்டுவதாக அமைகிறது. அடுத்தவர் பயன்படுத்துகிற கடுமையின் அளவுக்கு செயல் ஞானத்தைப் பயன்படுத்தி அதே அளவுக்கு சிறிய பதில் தருவதின் அசல் நோக்கம் குழப்பத்தைத் தடுப்பதாகும். ஆகவே குழப்பத்தை தடுப்பதே அசல் நோக்கமாகும். தூதுச் செய்தியை சரியான முறையில் கொண்டு சேர்ப்பதும் மிகவும் அவசியம் ஆகும். எதிரிகள் பயன்படுத்திய ஒரு வழியை அன்னார் ஒருபோதும் பயன்படுத்தியதில்லை.

அது அல்லாமல் அன்னார் இவ்வாறும் கூறினார்கள்: "ஆட்சி மற்றும் சட்டத்திற்குக் கட்டுப்படுதல் மிகவும் அவசியமாகும்." குழப்பம் பரவுவதை தடுப்பதற்காக சான்று மூலமே அன்னார் பேசினார்கள். நாட்டின் சட்டத்தை அவர்கள் பின்பற்றினார்கள்.

எவ்வாறிருப்பினும், தன்மானத்தைக் காட்ட வேண்டிய இடத்தில் அன்னார் தன்மானத்தைக் காட்டினார்கள். அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள்: ஜாதில்ஹும் பில்லதீ ஹிய அஹ்ஸன் என்பதற்கு உண்மைக்கு மாற்றமாக ஆமாம் போட வேண்டும் என்பது ஒருபோதும் பொருளல்ல. இறைமையை வாதிக்கும் ஒரு மனிதனை, நமது ரஸூலை பெரும் பொய்யர் (நவூதுபில்லாஹ்) என்று முன்னறிவிக்கும் விதத்தில் கூறுபவரை ஹஸ்ரத் மூஸாவிற்கு கொள்ளையர் என்று பெயர் வைப்பவரை நல்லவர் என்று கூற முடியுமா? அவ்வாறு செய்வது அழகிய விவாதமா? மாறாக அது நயவஞ்சகம் மற்றும் ஈமான் இல்லாததன் ஒரு பிரிவு ஆகும். (திரியாக்குல் குலூப். ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 305 அடிக்குறிப்பு) ஆகவே இந்த வித்தியாசத்தையும் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆமாம் போடக் கூடாது. எனவே நாம் தப்லீக் செய்ய வேண்டும். மற்றவருக்கு தமது கருத்தை எடுத்துக் கூற வேண்டும் என்பதற்காக தன்மானமே முற்றிலும் அழிந்து விடும் அளவுக்குப் போக முடியாது. எனினும் சண்டை சச்சரவு கூடாது. ஆனால் ஓரளவுக்கு அவர்களின் வார்த்தைகளை அவர்களுக்கே திருப்பித் தர வேண்டியதும் ஏற்படுகிறது. ஆகவே எங்கு எதிரிகள் அளவுக்கு அதிகமாக ஆட்சேபனை செய்கிறார்களோ, அளவுக்கு அதிகமாக அசுத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்களோ அந்த இடங்களில் குழப்பத்தைத் தடுப்பதற்காக பதில் சொல்ல வேண்டியது ஏற்படுகிறது.

அதேபோன்று இதனையும் கூறினார்கள்: மென்மை என்பதற்கு பயந்துபோய் எப்போதும் ஆமாம் போட்டுக் கொண்டு உண்மைக்கு மாற்றமாக கூறப்பட்டாலும் அதனை உண்மைப்படுத்திக் கொண்டு போக வேண்டும் என்பது ஒருபோதும் பொருளல்ல. எவ்வாறிருப்பினும் ஹிக்மத் அவசியமாகும். மென்மை மற்றும் நல்லொழுக்கமும் அவசியமாகும். தவறான விஷயத்தை தவறு என்று கூறுவதும் அவசியமாகும். ஆகவே இவ்விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஹிக்மத் என்பதன் பொருள் கோழைத்தனம் அல்ல. அல்லது அருகில் கொண்டு வருவதற்காக தவறான விஷயத்தை உண்மைப்படுத்த வேண்டும் என்பதல்ல. உதாரணமாக, இன்று உலகியல்வாதிகள் சுதந்திரத்தின் பெயரால் எத்தகைய சட்டத்தை உருவாக்கி வைத்துள்ளார்கள் எனில் அதனை ஒதுபோதும் ஷரீஅத் அனுமதிக்காது. அவர்களுக்கு எதிராக ஏதாவது பேசி விட்டால் இந்த அஹ்மதிகளும் தம்மை என்ன தான் தீவிரவாதத்திலிருந்து விலகி இருப்பதாகக் கூறினாலும் நாங்கள் கடுமையை விரும்புபவரல்ல என்று நிரூபித்தாலும், சில விவகாரங்களில் இவர்களும் கடுமையை விரும்புபவர்கள்தான் என்று கூறுகின்றனர். உதாரணமாக, இதனை தருகின்றனர். பெண்களுடன் கை குலுக்கும் விவகாரம் அல்லது ஓரினச் சேர்க்கை விவகாரம் ஆகும். இப்போது ஜெர்மனியில் என்னிடம் கேட்டார்கள். எனது பதிலைக் கேட்டு சிலர் எதிராக கருத்தை வெளியிட்டார்கள். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு உண்மை என்னவென்று புரியாமல் நாம் சண்டை போடத் தேவையில்லை. ஆனால் எவ்வாறிருப்பினும் எது தவறோ அதனை தவறு என்று கூறியே ஆக வேண்டும்.

கடந்த நாட்களில் ஓர் அரசியல் கட்சி உறுப்பினர் பற்றி அவர் தலைவருக்காக நிற்பார் என்று பிரபலமாக பேசப்பட்டது. அவர் நான் கட்சியின் தலைவருக்காக நிற்கப் போவதில்லை என்று அறிவித்தார். காரணம் ஒன்று அவர் ஓரினச் சேர்க்கைக்கு எதிரானவர். இரண்டாவது, கருக்கலைப்பிற்கு எதிரானவர். இந்த இரண்டும் எப்படி இருக்கிறது எனில் அதனை கேட்பதற்கு சமூகத்தில் இடமில்லை. ஓரினச் சேர்க்கை குறித்து திருக்குர்ஆனும் பைபிளும் சமுதாய அளவில் இந்த தீமையைச் செய்பவருக்கு அல்லாஹ்வின் தரப்பில் தண்டனை உண்டு என்ற இரு வேதங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கருக்கலைப்பைக் கூட நாம் சில சூழ்நிலைகளில் அனுமதிக்கப்பட்டதாகக் கருதுகிறோம். எவ்வாறிருப்பினும் அது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…**

எதற்கு தவ்ஹீது என்று பெயரோ, எது இரட்சிப்பிற்கு அடித்தளமாக இருக்கிறதோ அது காலத்தின் நபி அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அன்னாருக்கு கட்டுப்பட்டு நடக்காமல் கிடைக்க முடியாது. தூதருக்குக் கட்டுபடாமல் காய்ந்துபோன தவ்ஹீது மட்டும் எதற்கும் உதவாது. மாறாக, உயிரற்ற மரணித்தவர் போன்றே அது இருக்கும்.

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…**

*நீங்கள் ஒருவருக்கொருவர் விரைவில் சமாதானம் செய்து கொள்ளுங்கள். உங்கள் சகோதரர்களின் பாவங்களை மன்னியுங்கள். ஏனென்றால் தமது சகோதரருடன் சமாதானத்தை மேற்கொள்வதை விரும்பாத மனிதர் விஷமியாவார். அவர் துண்டிக்கப்படுவார். ஏனெனில், அவர் பிரிவினையை ஏற்படுத்துகிறார்.*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…**

*நீங்கள் உங்கள் மன உணர்வுகளை எல்லாக் கோணத்திலும் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் கோபத்தை விட்டு விடுங்கள். நீங்கள் மன்னிக்கப்படுவதற்காக உண்மையாளர்களாக இருந்தும் பொய்யர்களைப் போன்று பணிவை மேற்கொள்ளுங்கள்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…**

*மன உணர்வின் இறுக்கத்தை விட்டு விடுங்கள். நீங்கள் எந்த வாசலில் அழைக்கப்படுகிறீர்களோ அதில் ஒரு மன இறுக்கமும் பிடிவாதமும் கொண்ட மனிதன் நுழைய முடியாது. உங்களில் அதிக கண்ணியத்திற்குரியவர் தமது சகோதரரின் பாவத்தை அதிகமாக மன்னிப்பவரேயாவார்.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

அவருடைய கொள்கை. அதனை அவர் தவறு எனக் கருதுகிறார். இவ்வாறு அந்த அரசியல் கட்சியின் முன்னணி தலைவர் ஒருவர் அந்த தலைமைப் பொறுப்பிலிருந்து இதற்காகவே விலகினார். நான் ஓரின சேர்க்கைக்கு எதிரானவர் என்றார்.

அவர் கூறுகிறார்: நான் எனது ஈமானைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதுதான் சிறந்தது.

ஆக, இம்மக்கள் உலகியல்வாதிகள். இவர்களிடம் மார்க்கம் கூட தமது அசல் நிலையில் நிற்கவில்லை. அப்படியிருந்தும் தமது உலகியல் விவகாரத்தை மார்க்கத்திற்காக அவர்கள் தியாகம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆமாம் போடவில்லை. கோழைத்தனம் காட்டவில்லை என்றால் நாம் எப்போதும் நிலைநிற்கக் கூடிய கடைசி ஷரீஅத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற நம்மிடம் எவ்வளவு உறுதியான ஈமான் இருக்க வேண்டும்? நமது உலகியல் தொடர்புகளிலும் தப்லீக் தொடர்புகளிலும் ஞானத்துடன் வலுவான ஆதாரத்துடனும் இவ்விஷயங்களை மறுக்க வேண்டும். நமது உலகியல் பலனுக்காக இவற்றிற்கு பயப்படவும் கூடாது. இதற்காக இவர்களுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுமோ என்பதற்காக இவர்களுக்கு நாம் ஆமாம் போடவும் கூடாது. ஞானத்துடன் பேசினால் எந்த தொடர்பும் முடிந்து போய் விடாது. பிறகு இன்னொன்று நேர்வழி பெறுபவர் யார் என்று எனக்கு தெரியும் என்று அல்லாஹ்வே கூறி விட்டான்.

ஆகவே எவருக்கு அல்லாஹ் நேர்வழிகாட்ட உள்ளானோ அவரது உள்ளத்தை அவனே திறக்கவும் செய்வான். பொறுப்பாளர்கள் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சிலவேளை கோழைத்தனம் அதிகமாக வெளிப்படுவதை நான் பார்த்துள்ளேன். எதிர்ப்பை நாம் பொருட்படுத்தக் கூடாது. எதிர்ப்பு தப்லீகின் வழியைத் திறக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: எந்த அளவுக்கு பொய் உண்மையை எதிர்க்கிறதோ அந்த அளவுக்கு உண்மையின் ஆற்றலும் வலுவடைந்து தீவிரமடைகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: உலகியல்வாதி –களிடம் கூட ஒரு விஷயம் பிரபல்யமாக உள்ளது. எந்த அளவுக்கு மே, ஜூன் மாதங்களில் வெப்பம் அதிகமாக இருக்குமோ அந்த அளவுக்கு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் மழையும் அதிகமாக இருக்கும். ஆகவே இது இயற்கைச் சட்டத்தின் காட்சியாகும். எந்த அளவுக்கு தீவிரமாக எதிர்ப்பு இருக்குமோ அதே அளவுக்கு அது மின்னுகிறது. தமது பொலிவைக் காட்டுகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: நாமே இதனை சோதித்துப் பார்த்துள்ளோம். எங்கெல்லாம் நம்மைப் பற்றி அதிகமாகவே எதிர்க்கப்பட்டதோ, கூச்சல் எழுந்ததோ அங்கு ஒரு ஜமாஅத் ஆயத்தமாகி விட்டது. எங்கு இதனைக் கேட்டு மக்கள் அமைதியாக இருந்து விட்டார்களோ அங்கு அதிக முன்னேற்றம் ஏற்பட்டதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 310-311; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்தக் காட்சி நமக்கு இன்றும் காணக் கிடைக்கிறது. கடந்த நாட்களில் ஜெர்மனியில் அல்ஜீரியாவிலிருந்து வந்த அங்குள்ள பிரபலமான ஜமாஅத் அல்லாத அறிஞர் ஒருவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவர், 'அங்கு உங்கள் ஜமாஅத் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது' என்று கூறினார். இது சரிதான். ஆனால் ஜமாஅத்தின் அறிமுகமும், தப்லீகும், நாட்டின் கிட்டத்தட்ட எல்லாப் பகுதியிலும் இந்த எதிர்ப்பின் காரணத்தால் பரவி விட்டது. மக்கள் ஜமாஅத்தை அறிய ஆரம்பித்து விட்டனர்.

அவர் கூறுகிறார்: இப்போது ஏற்பட்ட இந்த அறிமுகம் ஒருவேளை 10–20 வருடங்கள் ஆனாலும் உங்களால் ஏற்படுத்த இயலாது. அந்த அளவுக்கு இந்த எதிர்ப்பினால் அறிமுகம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே அங்குள்ள அஹ்மதிகளும் எழுதுகிறார்கள்: இப்போது நிலைமை சற்று சரியானதும், பெரும்பாலான பகுதிகளிலுள்ள மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்கத் தயாராகவும் உள்ளனர்; ஆகவே, எதிர்ப்புகள் மற்றும் இவ்வகை உலகியல்வாதிகள் குறித்து அச்சப்பட வேண்டியதில்லை. ஆனால் அத்துடன் ஹிக்மத் அவசியமாகும். தப்லீகிற்கு இதுவும் மிக அவசியமாகும். மனிதனின் சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று இணக்கமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறோமோ அதன்படி செயல்படவும் வேண்டும். ஹிக்மத்தின் பேச்சுகள் வாயிலிருந்து வெளி வந்து மற்றவரிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: பெரும்பாலானவர்கள் தங்களை மவ்லவிகள், ஆலிம்கள் என்று கூறிக் கொண்டு மெம்பர்களில் ஏறி தம்மை ரஸூலின் உதவியாளர்கள் என்றும், நபிமார்களின் வாரிசுகள் என்றும் கூறியவாறு சொற்பொழிவாற்றிக் கொண்டு திரிகின்றனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: தற்பெருமை கொள்ளாதீர்கள். தீமை செய்வதிலிருந்து விலகி விடுங்கள்.

ஆனால் இவர்களின் செயலுமே அவ்வாறுதான் உள்ளது. மேலும் இவர்களின் செயல்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அவர்களின் வார்த்தைகள் உங்கள் உள்ளத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதிலிருந்து மதிப்பிட்டுக் கொள்ளுங்கள். தப்லீக் செய்கின்ற ஒவ்வொருவரின் சொல்லும் செயலும் ஒன்றாக இருந்தால்தான் அவரது வார்த்தைகளுக்கு தாக்கம் ஏற்படும்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*


S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
Metro Zone
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...
நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.
மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

B. Mohamed Adil
93632 06679
99433 38000

National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

# ஒரே அமர்வில் மூன்று தலாக் கொடுப்பது தொடர்பாக ஷரீஅத் கூறுவது என்ன? மற்றும் பெண்களின் உரிமைகள்

❖ ❖ ❖ மன்சூர் அஹ்மது மஸ்ரூர் (ஆசிரியர், பத்ர் வார இதழ் - உருது பதிப்பு) ❖ ❖ ❖

***(இறுதிப் பாகம்)***

இஸ்லாம் பெண்கள் மீது பேரருள் செய்துள்ளது. இப்போது குறிப்பாக நாம் மனைவியரிடம் நல்ல முறையில் நடந்து கொள்வது மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பான இஸ்லாமிய போதனைகளை எடுத்துக் கூறுவோம். அல்லாஹ், மனைவியரிடம் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக போதனை செய்தவாறு திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

(1) يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَحِلُّ لَكُمْ اَنْ تَرِثُوا النِّسَآءَ كَرْهًا ؕ وَلَا تَعْضُلُوْهُنَّ لِتَذْهَبُوْا بِبَعْضِ مَآ اٰتَيْتُمُوْهُنَّ اِلَّآ اَنْ يَّاْتِيْنَ بِفَاحِشَةٍ مُّبَيِّنَةٍ ۚ وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ ۚ فَاِنْ كَرِهْتُمُوْهُنَّ فَعَسٰٓى اَنْ تَكْرَهُوْا شَيْـًٔا وَّيَجْعَلَ اللّٰهُ فِيْهِ خَيْرًا كَثِيْرًا ○

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் வலுக்கட்டாயமாகப் பெண்களுக்கு வாரிசுகளாவது உங்களுக்கு ஆகுமானதன்று. நீங்கள் அவர்களுக்கு கொடுத்ததிலிருந்து ஒரு பகுதியினை(ப் பறித்து) எடுத்து கொள்ளும் நோக்கத்துடன் அவர்களைத் துன்புறுத்தாதீர்கள். எனினும், அவர்கள் மிக வெளிப்படையான ஏதாவதொரு தீமையைச் செய்வார்களாயின் (அதற்குரிய கட்டளை மேலே கூறப்பட்டு விட்டது). நீங்கள் அவர்களுடன் நல்ல முறையில் (கண்ணியமான முறையில்) நடந்து கொள்ளுங்கள். மேலும், நீங்கள் அவரை வெறுக்கின்றீர்கள் எனில் நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை வைத்திருக்க முற்றிலும் வாய்ப்புண்டு (என்பதை நினைவில் கொள்ளுங்கள்).

☆ இந்த வசனத்தில் وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ என்ற சொற்களில் மனைவியரிடம் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பான சிறந்த போதனை தரப்பட்டிருக்கின்றது. மேலும், மனைவியருக்கு எந்த பொருள்கள் வாரிசு என்ற நிலையில் கிடைக்கின்றதோ அதை வலுக்கட்டாயமாக அபகரித்துக் கொள்ளக் கூடாது என்றும் கூட ஆண்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது.

☆ எவற்றை நீங்கள் உங்கள் மனைவியருக்கு கொடுத்துள்ளீர்களோ அதை மீண்டும் அவர்களிடம் இருந்து பறித்து எடுத்துக் கொள்ள முயற்சி செய்யாதீர்கள் என்றும் ஆண்களுக்கு கட்டளை இடப்பட்டிருக்கின்றது.

☆ உங்களில் எவராவது உங்கள் மனைவியரை வெறுக்கின்றீர்கள் என்றால் அவர் அதுபற்றி நன்றாக சிந்தனை செய்து பார்க்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் அவருக்கு அந்த மனைவியிடம் ஏராளமான நன்மைகளை வைத்திருக்கலாம். அவர் அவளை வெறுப்பது தவறாக இருக்கலாம். எவ்வித காரணமுமின்றி அவர் அவளை வெறுக்கலாம் என்றும் இவ்வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

(2) அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَلَهُنَّ مِثْلُ الَّذِيْ عَلَيْهِنَّ بِالْمَعْرُوْفِ மேலும் அந்தப் (பெண்களுக்கு) நியாய முறைப்படி வழக்கத்திற்கு ஏற்றவாறு (ஆண்களுக்கு) அவர்கள் மீது எந்த அளவு உரிமை இருக்கின்றதோ அதே அளவு (ஆண்கள் மீது) அவர்களுக்கும் உரிமை இருக்கின்றது. (2:229)

இந்த வசனத்தில் குறிப்பாக மனைவியரின் உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீ∴பா ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தின் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் கூறும்போது இவ்வாறு கூறுகின்றார்கள்: மனிதன் என்ற நிலையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள உரிமைகள் சமமானவையாகும் என்ற பொதுவான சட்டம் இங்கு கூறப்பட்டிருக்கின்றது. எவ்வாறு ஆண்களுக்கான உரிமைகளைக் கருத்தில் கொள்வது பெண்களுக்கு அவசியமான -தாக இருக்கின்றதோ அவ்வாறே பெண்களுக்கான உரிமைகளைச் செலுத்துவது ஆண்களுக்கு அவசியமானதாக இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்னர் பெண்களுக்குரிய எந்த உரிமைகளும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்தது. மாறாக பொருள் மற்றும் சொத்துக்கள் போன்று ஒருவரிடமிருந்து மற்றவரிடம் செல்கின்ற வாரிசுப் பொருட்கள் போன்று அவர்கள் கருதப்பட்டு வந்தனர். அவர்களது பிறப்பு ஆண்களின் மகிழ்ச்சிக்குக் காரணமான ஒரு விஷயமாக மட்டுமே கருதப்பட்டு வந்தது. இஸ்லாம் மட்டுமே பெண்களின் மனிதத் தன்மையை பெரிதாக எடுத்துக் காட்டுகின்ற மார்க்கமாக இருக்கின்றது. மனிதன் என்ற நிலையில் பெண்களுக்கு சமமான உரிமைகளை நிலைநாட்டிய முதல் மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள். ஆண்களுக்கு பெண்கள் மீது இருக்கின்ற அதே அளவிலான உரிமை பெண்களுக்கும் வழக்கத்திற்கு ஏற்றபடி (ஆண்களாகிய) அவர்கள் மீது இருக்கின்றது என்ற வசனத்திலுள்ள கருத்தை பெருமானார் (ஸல்) அவர்கள்தான் மக்களது மூளையில் நன்றாக பதிய வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றுக்களில் பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது மற்றும் அவர்களுக்குரிய உரிமைகள் மற்றும் தகுதிகள் தொடர்பாக எந்த அளவு கட்டளைகள் இருக்கின்றனவோ அவற்றில் பத்தில் ஒரு பகுதி கூட வேறு எந்த மார்க்கத் தலைவரின் போதனைகளில் நமக்கு கிடைக்கவில்லை.

(3) எந்த மனைவியரின் கணவர்கள் இறந்து விட்டனரோ அவர்களுக்காக இன்னொரு சிறந்த போதனை திருக்குர்ஆனில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது. وَاَنْكِحُوا الْاَيَامٰى مِنْكُمْ உங்களில் விதவைகளாக இருப்பவர்களுக்கு திருமணம் செய்து வையுங்கள். (24:33)

விதவைகள் மீது இஸ்லாம் எவ்வளவு பெரிய நன்மையைச் செய்திருக்கின்றது என்றால் அவர்களில் எவர்களுக்கு திருமணம் செய்ய முடியுமோ அவர்களுக்கு திருமணம் செய்து வைக்குமாறு அது போதிக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி எவ்வாறு இருந்தது என்றால் அவர்களின் ஒரு மனைவியைத் தவிர மற்ற எல்லா மனைவியரும் விதவைகள் ஆவர். மிகவும் தூய்மையான அமைதி நிறைந்த சமுதாயத்தை வடிவமைப்பதற்கு இஸ்லாத்தில் எவ்வளவு மகத்தான போதனையாக இது இருக்கின்றது. இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் இஸ்லாத்தின் இந்த அழகிய போதனையைப் பற்றி சிந்திக்க வேண்டும். குறிப்பாக சில மதங்களில் விதவைகள் சமுதாயம் மற்றும் குடும்பத்துக்கு மிகவும் களங்கத்தையும் அவமரியாதையையும் ஏற்படுத்துபவர்களாகக் கருதப்பட்டனர். அதன் காரணமாக இறந்துபோன கணவனின் உடலுக்கு தீ மூட்டப்படும்போது அந்த தீயில் குதித்து தனது இன்னுயிரைத் துறக்க வேண்டிய நிலையில் விதவைகள் இருந்தனர். அல்லது வீடு வீடாகச் சென்று தட்டுத் தடுமாறி தமது வாழ்வைக் கழிக்க வேண்டிய அவல நிலைக்கு அவர்கள் ஆளாகியிருந்தனர். இந்த கோணத்தில் பார்க்கும்போது இஸ்லாம் விதவைகள் மீது பேரருள் புரிந்துள்ளது என்றே கூற வேண்டும்.

(4) மனைவியர்கள் மீது இஸ்லாம் செய்துள்ள இன்னொரு பேரருள் அது மனைவிக்காக ஒரு பொருத்தமான தொகையைக் கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பை கணவன் மீது கட்டாயமானதாக ஆக்கியிருக்கின்றது. அதற்கு “மஹர்” என்று இஸ்லாமிய சொல் வழக்கில் கூறப்படுகின்றது. இது கணவரின் பொறுப்பில் இருக்கின்ற ஒரு கடனாகும். அதை செலுத்த வேண்டியது அவர் மீது கட்டாயமானதாகும். நாம் ஏற்கனவே கூறியிருந்தது போன்றே மஹர் தொகை என்பது ஜமாஅத்தின் இரண்டாவது கலீ∴பாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தின் மஹ்முது அஹ்மது (ரலி) அவர்கள் குறிப்பிட்டிருந்ததற்கேற்ப குறைந்தபட்சம் கணவரின் ஆறு மாதகால வருமானத்திலிருந்து ஒரு வருட காலம் வரை உள்ள வருமானமாக இருக்க வேண்டும். கடனை எந்த அளவு விரைவாக திரும்பச் செலுத்த வேண்டுமோ அதுபோன்றே முடிந்த அளவு விரைவாக மஹர் தொகையை மனைவியிடம் கொடுத்து விடுவது சிறந்தது என்பதே மஹர் தொடர்பான இஸ்லாமிய போதனையாகும். மஹர் மனைவிக்குரிய உரிமையாகும். அதை அவர்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*பூமியில் ஆணவங் கொண்டு நடக்காதீர். ஏனென்றால் இதனால் நாட்டின் எல்லையையும் உம்மால் அடைந்து விட முடியாது. மேலும் (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

தான் விரும்புவது போல செலவு செய்து கொள்ளலாம். கணவர் இறந்து விட்ட நிலையில் அவர் மஹர் தொகையையும் உடனடியாக அவரிடம் கொடுத்து விட வேண்டும். மஹர் தொகையைக் கொடுப்பதில் பல்வேறு நுட்பமான ஞானங்கள் உள்ளன. சில நேரங்களில் இது மனைவிக்கு மிகப்பெரும் ஆதரவாக ஆகி விடுகின்றது. மஹர் தொகையைச் செலுத்துவது தொடர்பாக திருக்குர்ஆனில் மிகவும் வலியுறுத்தி கூறப்பட்டிருக்கின்றது. பெண்களுக்கு அவர்களின் மஹர்களை وَآتُوا النِّسَاءَ صَدُقَاتِهِنَّ نِحْلَةً மனவிருப்புடன் கொடுத்து விடுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். (4:5) மேலும் அவன் கூறுகின்றான்:

فَمَا اسْتَمْتَعْتُم بِهِ مِنْهُنَّ فَآتُوهُنَّ أُجُورَهُنَّ فَرِيضَةً ۚ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيمَا تَرَاضَيْتُم بِهِ مِن بَعْدِ الْفَرِيضَةِ ۚ إِنَّ اللَّهَ كَانَ عَلِيمًا حَكِيمًا

நீங்கள் அவர்களிடமிருந்து பயனடைந்தால் அவர்களுக்கெனக் குறிப்பிட்ட மஹரைக் கொடுத்து விடுங்கள். மஹர் தொகையை குறிப்பிட்ட பின்னர் அது குறித்து (கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ கொடுப்பது பற்றி) நீங்கள் உங்களுக்குள் உடன்பாடு செய்து கொள்வதில் எந்தக் குற்றமுமில்லை. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவனும். நுண்ணிய ஞானம் உடையவனும் ஆவான்.(4:25)

(5) இஸ்லாம் மனைவியர் மீது செய்துள்ள இன்னொரு பெரும் நன்மை என்னவென்றால் அது எல்லா வகையான செலவுகளுக்கான பொறுப்பையும் ஆண் மீதே சுமத்தி இருக்கின்றது. எவ்வகையிலான குடும்பச் செலவுகளுக்கான பொறுப்பையும் அது பெண் மீது சுமத்தவில்லை. இன்றைய மேற்கத்திய சமூகத்தில் பெண்கள் சம்பாதிக்க வேண்டும் என்பது அவசியமானதாக கருதப்படுகின்றது. அதன் விளைவாக பெரும்பாலான குடும்ப வாழ்க்கை அழிந்து நாசமாகி விட்டது. வாழ்வில் அமைதியும் நிம்மதியும் இல்லாமல் ஆகி விட்டது. சந்ததிகளின் மார்க்கப் பயிற்சி மற்றும் அவர்களைப் பாரமரிப்பது என்பது ஒரு பெரும் பிரச்சனையாக ஆகி விட்டது. ஆனால், இஸ்லாம் ஒரு மனைவியிடமிருந்து அவள் பிள்ளைகளுக்கு சரியான கல்வியையும் பயிற்சியையும் வழங்கி அவர்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது. மேலும், அவள் கணவனுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதுடன் கணவன் இல்லாத சமயத்தில் அவனது பொருள்-களைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் இஸ்லாம் அவனிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

الرِّجَالُ قَوَّامُونَ عَلَى النِّسَاءِ بِمَا فَضَّلَ اللَّهُ بَعْضَهُمْ عَلَىٰ بَعْضٍ وَبِمَا أَنفَقُوا مِنْ أَمْوَالِهِمْ

ஆண்கள் பெண்களின் காப்பாளர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் சிலரை சிலரைவிட அல்லாஹ் மேன்மையாக்கியுள்ளான். மேலும் அவர்கள் தங்கள் பொருள்களை(ப் பெண்களுக்காக) செலவு செய்கின்றனர்.(4:35)

(6) இஸ்லாம் பெண்கள் மீது செய்துள்ள இன்னொரு பெரிய நன்மை என்னவென்றால் எங்கு அது பெண்ணின் திருமணத்திற்காக அவளது வலி-யின் விருப்பத்தை அவசியமானதாக ஆக்கி-யுள்ளதோ அங்கு பெண்ணின் விருப்பத்தையும் அது கட்டாயமானதாக ஆக்கியிருக்கின்றது. இந்த இரு கட்டளைகளும் பெண்ணை இழப்பிலிருந்து பாதுகாப்பதற்கும் அவளை பாதுகாப்பதற்கும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவதாக இருந்தால் எந்த ஒரு தந்தையும் தனது மகளின் திருமணத்தை அவளது விருப்பம் இல்லாமல் தனது விருப்பத்திற்கு ஏற்ப தான் விரும்பும் இடத்தில் செய்து வைக்க முடியாது. திருமண விஷயத்தில் தந்தை மகளை வற்புறுத்த முடியாது. அவ்வாறே அந்த பெண்ணும் கூட வலியின் (காப்பாளரின்) சம்மதம் இல்லாமல் தனது விருப்பத்திற்கு ஏற்ப, தான் விரும்பும் இடத்தில் திருமணம் செய்து கொள்ள முடியாது. சிந்தித்துப் பார்த்தால் இது இஸ்லாத்தின் எத்தகு அழகிய போதனையாக இருக்கின்றது என்பது தெரிய வரும். மிகச் சிறந்த அறிவுப்பூர்வமான அணுகுமுறையின் மூலம் இஸ்லாம் பெண்களுக்-கான உரிமைகளைப் பாதுகாத்திருக்கின்றது - சுப்ஹானல்லாஹ்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீ∴பா ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்தவொரு பெண்ணும் தனது தாய் தந்தையரின் அனுமதி இல்லாமல் திருமணம் செய்து கொள்ள முடியாது என்பது ஷரீஅத்தின் கட்டளையாகும். இந்த கட்டளை எத்தகையது என்றால் அது தன்னகத்தே மிகப்பெரும் பலன்களைக் கொண்டிருக்கின்றது. ஐரோப்பாவில் இத்தகைய பல உதாரணங்களை காண முடிகின்றது. அதாவது சிலர் ஏமாற்றுபவர்-களாக இருந்தனர். ஆனால் அவர்கள் அழகிய தோற்றமுள்ள இளைஞர்களாக இருந்தனர். அவர்கள் பெரும் பெரும் குடும்பத்தைச் சார்ந்த பெண்களை மணமுடித்துக் கொண்டனர். திருமணத்திற்கு பிறகு பல வகையான தீமைகள் உருவாகி விட்டன. பெண்கள் மீது அநீதியிழைக்க வேண்டும் என்பதோ அல்லது அவர்களின் ஏதாவதொரு உரிமையைப் பறிக்க வேண்டும் என்பதோ ஷரீஅத்தின் நோக்கமல்ல. மாறாக, ஷரீஅத்தின் இந்த தனிச்சிறப்புமிக்க கட்டளையின் நோக்கம், எந்த விஷயங்களினால் பெண்களுக்கு இழப்புகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றதோ அதிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதாகும். இதன் காரணமாகவே எந்த விஷயங்களில் பெண்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பு இல்லையோ அவற்றில் அவர்களுக்கான உரிமையை சுயமே இறைவனே அவர்களுக்குத் தந்துள்ளான். எனவே, திருக்குர்ஆன் எவற்றையெல்லாம் கூறி இருக்கின்றதோ அது தன்னகத்தே பெரும் ஞானங்களையும் பொருத்தமுள்ள போதனைகளையும் கொண்டிருக்கின்றது. உலகம் அதற்கு மாற்றமாக செயல்படுகின்றது என்றால் அதன் விளைவாக பல வகையான இழப்புகளுக்கும் அது ஆளாகின்றது. அது இஸ்லாத்தின் கட்டளைக்கு எதிராக செயல்படுவது ஒருபோதும் நல்ல விளைவை ஏற்படுத்தாது என்ற விஷயத்திற்கு ஆதாரமாகத் திகழ்கின்றது. (த∴ப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 513)

(7) இஸ்லாம் மனைவியர் மீது செய்துள்ள இன்னொரு பெரும் நன்மை என்னவென்றால் அது எங்கு ஆணுக்கு தலாக் கொடுப்பதற்கான உரிமையை வழங்கியுள்ளதோ அங்கு அது பெண்ணுக்கு குலா பெற்றுக் கொள்வதற்கான உரிமையை வழங்கியுள்ளது. குலா பெறும் நிலையிலும் கூட இஸ்லாம் பெண்களுக்குரிய உரிமைகளை முழுமையாகக் கருத்தில் கொண்டிருக்கின்றது.

(8) இஸ்லாம் மனைவியர் மீது செய்துள்ள இன்னொரு பெரும் நன்மை என்னவென்றால் அது கணவரின் சொத்துகளில் மனைவிக்கு பங்கு இருக்கின்றது என்று கூறுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَهُنَّ الرُّبُعُ مِمَّا تَرَكْتُمْ إِن لَّمْ يَكُن لَّكُمْ وَلَدٌ ۚ فَإِن كَانَ لَكُمْ وَلَدٌ فَلَهُنَّ الثُّمُنُ مِمَّا تَرَكْتُم ۚ مِّن بَعْدِ وَصِيَّةٍ تُوصُونَ بِهَا أَوْ دَيْنٍ

உங்களுக்கு சந்ததி இல்லையாயின் நீங்கள் விட்டுச் செல்வதிலிருந்து (உங்கள் மனைவியர்-களாகிய) அவர்களுக்கு(ரிய பங்கு) நான்கில் ஒன்றாகும். உங்களுக்கு சந்ததி இருந்தால் நீங்கள் விட்டுச் செல்வதிலிருந்து (உரிய பங்கு) எட்டில் ஒன்றாகும். (இப்பங்குகள்) நீங்கள் செய்திருக்கும் வஸிய்யத் (உங்களுடைய) கடன் ஆகியவற்றை நிறைவேற்றியதற்குப் பின்னரே கொடுக்கப்படும் (4:13)

(9) இஸ்லாம் ஆண்கள் பெண்களுக்கு தலாக் கொடுக்கும்போது அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் அவர்களுக்கு பயன் தரும் வகையில் நடந்து கொள்ளுமாறும் மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளது. மேலும் அவர்களுடன் எவ்வகையிலும் அநீதியுடன் நடந்து கொள்வதிலிருந்து அது ஆண்களை தடுத்துள்ளது.

(10) அறியாமைக் காலத்தில் "ஈலா" மற்றும் "ஸிஹார்" ஆகிய இரு சடங்குகள் இருந்தன. அவற்றின் மூலமாக கணவன் தனது மனைவியுடன் உள்ள தொடர்பை துண்டித்துக் கொண்ட நிலையில் அவளை தனியாக விட்டு விடுகின்றான். அதாவது அவன் அவளுக்கு தலாக் கொடுக்காமலும் அவளுக்குரிய உரிமைகளையும் செலுத்தாமலும் அவளை தனியாக விட்டு விடுகின்றான். "ஈலா" பற்றிய குறிப்பு அல் பக்கரா அதிகாரத்தின் 227 -வது வசனத்தில் வருகின்றது. "ஸிஹார்" பற்றிய குறிப்பு அல் முஜாதிலா அதிகாரத்தின் 3 மற்றும் 4 -வது வசனங்களில் வருகின்றது. அல்லாஹ் அறியாமை காலத்திருந்த அத்தகைய சடங்குகள் மூலம் பெண்களை தனியாக விட்டு விடுவதிலிருந்து தடை செய்துள்ளான். அத்தகைய அசுத்தமான சடங்குகளை அவன் முடிவுக்குக் கொண்டு வந்து அவற்றை அழித்து விட்டான். எனவே, இஸ்லாம் பெண்கள் மீது செய்துள்ள இன்னொரு பெரும் ஞானம் என்னவென்றால் அது பெண்கள் மீது செய்யப்படுகின்ற எல்லா அநீதிகள் மற்றும் கொடுமைகளுக்கான வழிகளை அடைந்து விட்டது.

(11) இஸ்லாம் நல்ல செயல்களின் விளைவாக உயர்வான தகுதியையும் மேலான இடத்தையும் பெறுவதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையில் எந்த வித்தியாசத்தையும் காட்டவில்லை. அல்லாஹ் கூறுகின்றான்: إِنَّ أَكْرَمَكُمْ عِندَ اللَّهِ أَتْقَاكُمْ நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உங்களுள் கண்ணியமிக்கவர் உங்களுள் இறையச்சமிக்கவரே (49:14). நம்பிக்கை கொண்டவருக்கு உதாரணமாக ∴பிர்அவ்னின் மனைவியான ஆஸியா அவர்களையும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் தாயாரான மர்யம் அவர்களையும் குறிப்பிட்டுக் கூறியிருப்பது இஸ்லாத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். (பார்க்க 66 -வது அதிகாரம் வசனங்கள் 12,13)

☆ மனைவியருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள சில கட்டளைகளை கீழே தருகின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: خَيْرُكُمْ خَيْرُكُمْ لِأَهْلِهِ وَأَنَا خَيْرُكُمْ لِأَهْلِي தனது மனைவி மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவரே உங்களில் சிறந்தவர் ஆவார். நான் உங்கள் எல்லாரை விடவும் எனது மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொள்வதில் சிறந்தவனாக இருக்கின்றான். (மிஷ்காத் பாபு இஷ்ரதுன்னிஸா)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உலகம் அழகின் பொருளாக இருக்கின்றது. ஓர் ஆணிற்கு எல்லாவற்றையும் விட மிகவும் சிறந்த அழகான பொருள் நல்ல மனைவியாவாள். (இப்னு மாஜா அப்வாபுன்னிக்காஹி பாபு அ∴ப்ஸலுன்னிஸாயி)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நம்பிக்கை கொண்டவர்களில் நம்பிக்கையின் அடிப்படையில் எவர் நல்லொழுக்கமுள்ளவராக இருக்கின்றாரோ அவரே முழுமை பெற்ற நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றார். தமது மனைவியரிடம் சிறந்த முறையில் நடந்து கொள்பவரே உங்களில் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் சிறந்தவராக இருக்கின்றார். (திர்மிதி கிதாபுன்னிக்காஹ் பாபு ஹக்குல் மர்அதி அலா ஸவ்ஜிஹா)

மனைவியர் நேர்மையுடனும் நன்றி உணர்வுடனும் குழந்தைகளுக்கு நல்ல தர்ப்பியத் வழங்குபவர்களாகவும் இருந்தால் அவர்கள் தமது கணவர்களுக்கு கிடைக்கின்ற நற்கூலி மற்றும் நற்பலனுக்கு சமமான நல்கூலியையும் நற்பலனையும் பெறத் தகுதியுள்ளவர்களாக இருப்பர். இதுபற்றி நபிமொழியில் இவ்வாறு வருகின்றது. ஒரு முறை அன்ஸார் தோழரான யஸீத் அவர்களின் மகளான அஸ்மா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் பெண்களின் பிரதிநிதியாக வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாய் தந்தையர் உங்களுக்காக அர்ப்பணம் ஆகட்டும். நான் பெண்கள் தரப்பிலிருந்து உங்களது சமூகத்தில் ஆஜராகியுள்ளேன். அல்லாஹ் உங்களை ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய அனைவருக்காகவும் தூதராக அனுப்பி-யுள்ளான். பெண்களாகிய நாங்கள் வீடுகளில் அடைபட்டுக் கிடைக்கின்றோம். ஆண்களுக்கு இந்த சிறப்பும் சந்தர்ப்பமும் கிடைத்திருக்கின்றது. அதாவது அவர்கள் ஜமாஅத்தான தொழுகை, ஜுமுஆ மற்றும் மக்கள் ஒன்று கூடுகின்ற ஏனைய சந்தர்ப்பங்களில் வந்து அதில் கலந்து கொள்கின்றனர். ஜனாஸா தொழுகையில் வந்து கலந்து கொண்டு தொழுகின்றனர். ஒரு ஹஜ்ஜிற்குப் பிறகு இன்னொரு ஹஜ் செய்வதற்காக செல்கின்றனர். எல்லாவற்றையும் விட மேலாக அல்லாஹ்வின் வழியில் அவர்கள் ஜிஹாது செய்கின்றனர். உங்களில் எவராவது ஹஜ், உம்ரா அல்லது ஜிஹாதிற்காக செல்லும் போது, பெண்களாகிய நாங்கள் உங்களது சந்ததிகளையும் உங்களது பொருள்களையும் பாதுகாப்பவர்களாக இருக்கின்றோம். நூலை கோர்த்து உங்களது ஆடைகளை தைக்கின்றோம். உங்களது குழந்தைகளைக் கண்காணித்து அவர்களை பராமரிப்பது அவர்களுக்கு கல்வி மற்றும் மார்க்கப் பயிற்சி வழங்கும் பொறுப்புகளை நிறைவேற்றுவது ஆகிய எல்லா பணிகளையும் நாங்கள் செய்து வருகின்றோம். ஆண்கள் தமது கடமையை நிறைவேற்றுகின்றனர். நாங்கள் எங்களது பொறுப்புகளை நிறைவேற்றுகின்றோம். இந்நிலையில் ஆண்களுக்கு சமமாக நாங்களும் நற்கூலியில் பங்கு பெற முடியுமா? என்று கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்கள் கூறிய இந்த விஷயங்களைக் கேட்டு விட்டு சஹாபாக்களின் பக்கம் திரும்பினார்கள். அவர்களைப் பார்த்து இந்த பெண்ணை விட மிகவும் சிறந்த முறையில் எந்த பெண்ணாவது தனது பிரச்சனையையும் வழக்கையும் எடுத்துக் கூற முடியுமா? என்று கேட்டார்கள். சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த அளவு சிறப்பாகவும் இந்த அளவு நல்ல விதத்திலும் தனது வழக்கை ஒரு பெண் எடுத்துக் கூறுவதை எங்களால் எண்ணிக் கூட பார்க்க முடியவில்லை என்று கூறினர். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அஸ்மா (ரலி) அவர்களின் பக்கம் திரும்பியவாறு இவ்வாறு கூறினார்கள்: பெண்மணியே! நன்றாக புரிந்து கொள். எவர்களுக்கு நீ பிரதிநிதியாக வந்திருக்கிறாயோ அவர்களிடம் சென்று கூறுவீராக. கணவனின் வீட்டை சிறந்த முறையில் கண்காணித்து அதை நல்ல முறையில் பாதுகாத்து வருகின்ற பெண்ணுக்கு அவனது கணவர் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதனால் கிடைக்கின்ற அதே நற்கூலியும் கிடைக்கும். (அஸதுல்காயதி ∴பீ ம∴ரிபதி சகாபதி தொகுதி 5 பக்கம் 399. அல் இஸ்திஆப் ∴பீ ம∴ரிபதி அஸ்ஹாபி தொகுதி 2 பக்கம் 726)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: பெண்களின் நன்மை மற்றும் அவர்களின் நலனை விரும்புவதை கருத்தில் கொள்ளுங்கள். ஏனென்றால், பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கின்றாள். அதாவது விலா எலும்பைப் போன்று அவளது இயல்பிலேயே கோணல் தன்மை இருக்கின்றது. விலா எலும்பின் மேற்பகுதியில் அதிகம் கோணல் இருக்கின்றது. நீங்கள் அதை நேராக வைப்பதற்கு முயற்சி செய்தால் அதை நீங்கள் உடைத்து விடுவீர்கள். நீங்கள் அது இருக்கும் நிலையிலேயே அதை விட்டு விட்டால் அதனால் ஏற்படுகின்ற பயன் உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும். எனவே, பெண்களுடன் மென்மையாக நடந்து கொள்ளுங்கள். இது தொடர்பாக நான் கூறும் போதனையை ஏற்று நடங்கள்.

ஹஸ்ரத் முஆவியா அவர்கள் அறிவிக்கின்-றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கணவர் மனைவிக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் என்ன? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள். "நீ அணிவதை அவளுக்கும் அணிவிப்பாயாக. அவளது முகத்தில் அடிக்காதே. வெறுக்கத்தக்க தோற்றத்தை உடையவளாக அவளை ஆக்கி விடாதே. அவளிடமிருந்து நீ தனியாக இருக்க வேண்டியது வந்தால் வீட்டிலேயே அவ்வாறு இருந்து கொள். அதாவது வீட்டிலிருந்து அவளை வெளியேற்றி விடாதே" என்று கூறினார்கள். (அபூதாவூது கிதாபுன்னிக்காஹ் பாபு ∴பீ ஹக்கில் மர்அதி அலா ஸவ்ஜிஹா)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு குமரிப் பெண் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தாள். தனது தந்தையார் தன்னை ஓர் இடத்தில் மணமுடித்து கொடுத்திருப்பதாகவும் அந்த திருமணத்தில் தனக்கு விருப்பம் இல்லை என்றும் கூறினாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவள் விரும்பினால் அந்த திருமணத்தில் நிலைத்திருக்கவும் அவள் விரும்பினால் அதை மறுப்பதற்குமுள்ள உரிமையை வழங்கினார்கள். (அபூதாவூது பாபு ∴பில் பக்ரி யஸவ்வஜுஹா அபூஹா)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனது பார்வையில் பெண்ணுக்கு எதிராக நிற்பவர் கோழையும் ஆன்மையற்றவரும் ஆவார். (மல்∴பூஸாத் தொகுதி 2 பக்கம் 387)

ஒரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: வெட்கக்கேடான விஷயங்களைத் தவிர பெண்களின் மற்ற எல்லா கோணலான ஒழுக்கங்களையும் கசப்புகளையும் சகித்துக் கொள்ள வேண்டும். ஆணாக இருந்து கொண்டு பெண்களுடன் போர் புரிவது நமக்கு முழுமையான வெட்கங்கெட்ட நிலையாக தெரிகின்றது. நம்மை இறைவன் ஆணாக ஆக்கி இருக்கின்றான். இது உண்மையில் நம்மீது அத்தாட்சியை நிறைவு செய்தல் ஆகும். பெண்களுடன் பரிவுடனும் மென்மையாகவும் நடந்து கொள்வதே அதற்காக நாம் செலுத்தும் நன்றியாகும். (யாகூ∴ப் அலி இர்∴பானி (ரலி) அவர்கள் எழுதியுள்ள ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் என்ற நூலிலிருந்து பக்கம் 400)

நாம் முன்மாதிரியாக மட்டும் இஸ்லாம் மனைவியருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக கூறியுள்ள மிகவும் உயர்வான அழகிய போதனைகளில் சிலவற்றை எடுத்துக் கூறியுள்ளோம். வேறு எவரும், தான் சார்ந்துள்ள மதத்தின் நூலிலிருந்து இதுபோன்ற உயர்வான போதனைகளை எடுத்துக் காட்ட முடியாது என்று எங்களால் உறுதியாகக் கூற முடியும். முஸ்லிம்களின் தவறான செயல்முறையை எடுத்துக் காட்டி இஸ்லாம் பெண்களுக்கு சமமான உரிமைகளை வழங்கவில்லை என்று கூறுவது முற்றிலும் அநீதியும் நீதிக்கு மாற்றமான செயலும் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*எவரிடமாவது ஏதாவது குறை மற்றும் தவறு வெளிப்பட்டால் அதனை மன்னிக்க வேண்டும். அதனை பெரிதுபடுத்தக் கூடாது. காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளக் கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 74)*

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.*

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். ஒருவர் என்னை ஆயிரம் முறை தஜ்ஜால் என்றும், பெரும் பொய்யன் என்றும் கூறியிருந்தாலும் என்னை எதிர்ப்பதற்காக எல்லா வகையிலும் முயற்சி செய்திருந்தாலும், அவர் சமாதானத்திற்காக வந்தார் எனில் அவர் என்ன கூறியிருந்தார்? என்னோடு அவர் எப்படி நடந்து கொண்டார் என்றெல்லாம் என் உள்ளத்தில் எண்ணம் வராது; வர முடியாது.*

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
**O.A.N. DOORS & STEELS**

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
*METAPLAST*
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்கு தனது செல்வத்திலிருந்து ஒரு நல்ல பகுதியைப் பிரித்துக் கொடுப்பவர் எவர்? அதன் காரணமாக அவர் அதனை அவருக்குப் பெருமளவில் பன்மடங்காகப் பெருக்குவான்..... (2:246)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

### திருக்குர்ஆனிலிருந்து...

தருமச் செயல்களையோ நற்காரியங்களையோ மக்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதையோ கொண்டு ஏவுகின்றவர்க(ளின் ஆலோசனை)களைத் தவிர்த்து, அவர்களின் ஆலோசனைகளுள் பெரும்பாலானவற்றில் எந்த நன்மையுமி(ருப்பதி)ல்லை.... (4:115)

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் தர்மங்களை வெளிப்படையாகச் செய்தால் அது(வும்) மிகச் சிறந்ததேயாகும். நீங்கள் அவற்றை மறைவாக ஏழைகளுக்கு வழங்கினால் அது உங்களுக்கு மிக்க நன்றேயாகும். (இதனால்) அவன் உங்களுடைய (பல) தீமைகளை உங்களை விட்டும் நீக்கி விடுவான்.... (2:272)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அல்லாஹ்வின் அருள்களை எண்ணத் தொடங்கினால் அவற்றை உங்களால் (ஒருபோதும்) கணக்கிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (16:19)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் பாதையில் (பொருளையும் உயிரையும்) செலவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் கைகளாலேயே (உங்களை) அழிவிற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயமாக நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (2:196)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

### திருக்குர்ஆனிலிருந்து...

மேலும், அவர்கள் அல்லாஹ்வையன்றி எவர்களை அழைக்கின்றனரோ அவர்களால் (பொய்க் கடவுளரால்) எதனையும் படைக்க முடியாது. மேலும் அவர்களே (இறைவனால்) படைக்கப்பட்டவர்கள். (16:21)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பலசாலி என்பவர் மற்றவரை வீழ்த்துபவர் அல்ல. அசல் பலசாலி கோபத்தின்போது தம்மை கட்டுப்படுத்திக் கொள்பவரேயாவார்.

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் சமாதானத்திற்கு இணங்கினால் (தூதரே) நீரும் சமாதானத்திற்கு இணங்குவீராக. அல்லாஹ்விடமே நீர் நம்பிக்கை வைப்பீராக. நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை) மிகக் கேட்பவனும் நன்று அறிபவனுமாவான். (8:62)

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 12 October 2017 Issue No. 41

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(குத்பா தொடர்ச்சி...)*

அவர்கள் கூறுகிறார்கள்: இம்மக்கள் செயலாற்றல் உள்ளவர்களாகவும் சொல்வதற்கு முன் தாம் செய்பவர்களாகவும் இருந்தால் திருக்குர்ஆனில் கபுர மக்தன் இந்தல்லாஹி அன் தகூலூ மாலா தஃப்அலூன் அதாவது நீங்கள் செய்யாததை ஏன் சொல்கின்றீர்கள் என்று கூற வேண்டிய அவசியம் என்ன? இந்த வசனமே கூறுகிறது. சொல்வதை தானே செய்யாதவர்களும் உலகில் இருந்தார்கள்; இருக்கிறார்கள்; இருப்பார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனது வார்த்தையை கேட்டு நினைவில் கொள்ளுங்கள். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மனிதனது பேச்சுக்கள் உண்மையான உள்ளத்துடன் இல்லை என்றால், செயல் ஆற்றல் அதில் இல்லை எனில், அது தாக்கம் ஏற்படுத்துவதாக இருக்காது. இதில்தான் நமது நபி கரீம் (ஸல்) அவர்களுடைய பேருண்மை நிரூபணமாகிறது. ஏனெனில் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் வெற்றி அவர்களது பங்கில் கிடைத்த அளவுக்கு ஆதமின் சந்ததிகளில் எவருக்கும் கிடைக்கவில்லை. இவை அனைத்தும் அன்னாரது சொல்லிலும் செயலிலும் இருந்த முழுமையான ஒற்றுமையால்தான் ஏற்பட்டது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 67-68; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பின்னர் அன்னார் கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள். (நமக்கு போதனை செய்கிறார்கள்.) செயலின்றி வெறும் வாயளவில் பேசுவது பயன் தராது. வெறும் பேச்சு அல்லாஹ்விடம் எந்த முக்கியத்துவமும் பெறாது. இந்த வகையில் இறைவன் கபுர மக்தன் இந்தல்லாஹி அன் தகூலூ மாலா தஃப்அலூன். நீங்கள் செய்யாததைச் சொல்வது இறைவன் பார்வையில் வெறுக்கத்தக்கதாகும் என்று கூறுகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 77; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்டவர் இரு சாயல்களை மேற்கொள்ளக் கூடாது. கோழைத்தனமும் நயவஞ்சகமும் அவரை விட்டு எப்போதும் தொலைவில் சென்று விடுகிறது.

எப்போதும் உங்கள் சொல் செயலை சரியாக்கி வையுங்கள். அதில் சஹாபாக்கள் தமது வாழ்வில் காட்டியது போன்று ஒருமைப்பாட்டைக் காட்டுங்கள். நீங்களும் அவர்களது அடிச்சுவட்டை பின்பற்றிச் சென்றவாறு உங்களது உண்மை மற்றும் நன்றியுணர்வின் முன்மாதிரியைக் காட்டுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 374; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஓரிடத்தில் போதனை செய்தவாறு கூறுகிறார்கள்: இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் அதன் உண்மையை வெளிப்படுத்துவதற்காக முதல் அம்சம் நீங்கள் உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியை காட்டுங்கள். இரண்டாவது அதன் அம்சம், சிறப்புகளை முழுமைகளை உலகில் பரப்புங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 323; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) முதலில் முன்மாதிரியாகுங்கள். பிறகு இஸ்லாத்தை தப்லீக் செய்யுங்கள். அதன் முழுமைகளை உலகில் பரப்புங்கள். ஆகவே தப்லீகிற்கு தனது நிலைமைகளில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். ஓர் உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியாக ஒரு மனிதன் ஆகும் போது பிறகு மக்களின் கவனம் ஏற்படவில்லையே என்ற கேள்விக்கே இடம் இருக்காது. முன்மாதிரியைப் பார்த்தே மக்கள் கவனம் செலுத்துகிறார்கள். இவ்வாறு முறையாக தப்லீகிற்கு முன்பாக அதற்கான வழி திறக்கிறது. அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

இழிவுடனும் அவமானத்துடனும் அவர்கள் மரணிப்பது வருத்தத்திற்குரியதாகும். இவரை தவிர இன்றும் பல மக்கள் உள்ளனர். அவர்கள் துன்பமிழைப்பதிலும் இழிவாகப் பேசுவதிலும் எல்லை மீறி இருந்தனர். இறைவனின் கோபத்திற்கு அவர்கள் அஞ்சாமல் இருந்தனர். இரவு பகலாக எள்ளி நகையாடுவதும் பரிகாசம் செய்வதும் ஏசிப் பேசுவதும் அவர்களின் பணியாக இருந்தது. இவர்கள் இறுதியில் பிளேக் நோயிற்கு இரையாகி விட்டனர்.

லாஹூரிலிருந்து முன்ஷி மஹ்பூப் ஆலம் சாஹிப் அஹ்மதி அவர்கள் எழுதுகின்றார்கள்: நூர் அஹ்மது என்ற பெயரில் எனது சிறிய தந்தை ஒருவர் இருந்தார். அவர் ஹாஃபிஸாபாத் தாஸிலைச் சார்ந்த படி ஜட்டா என்ற இடத்தில் வசித்து வந்தார். அவர் ஒரு நாள் என்னிடம் மிர்ஸா சாஹிப் மஸீஹ் என்ற தனது வாதத்திற்கு ஆதரவாக ஏன் எந்த அடையாளத்தையும் காட்டவில்லை என்று கேட்டார். அதற்கு நான், அந்த அடையாளங்களில் ஒரு அடையாளம்தான் பிளேக் நோயாகும். அது முன்னறிவிப்பு செய்யப்பட்ட பிறகு வந்திருக்கின்றது. அது உலகை தின்று கொண்டே இருக்கின்றது என்று கூறினேன். இதைக் கேட்டதும் அவர் பிளேக் நோய் எங்களைத் தொடாது. மாறாக இந்த பிளேக் நோய் மிர்ஸா சாஹிபின் மீதே ஏற்படும் என்று கூறினார். இத்துடன் எங்களது உரையாடல் முடிவுக்கு வந்தது. நான் லாஹூர் சென்று சேர்ந்ததும் ஒரு வாரத்திற்குப் பிறகு எனது சிறிய தந்தையாரான நூர் அஹ்மது பிளேக் நோயினால் மரணித்து விட்டார் என்ற செய்தி எனக்கு கிடைத்தது. இந்த கிராமத்தைச் சார்ந்த பல மக்களும் எங்களது இந்த உரையாடலுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர். இது மறைக்க முடியாத சம்பவமாகும்.

மேலும், மியான் மிஃராஜுத்தீன் சாஹிப் அவர்கள் லாஹூரிலிருந்து எழுதுகின்றார்கள்: மவ்லவி ஃபாஸில் மற்றும் முன்ஷி ஃபாஸில் ஆகியவற்றின் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருந்த மவ்லவி ஜெய்னுல் ஆபிதீன் என்ற ஒருவர் இருந்தார். இவர் மவ்லவி குலாம் ரசூல் அவர்களின் உறவினர்களில் ஒருவராவார். மார்க்கக் கல்வி கற்று பட்டம் பெற்றவர் ஆவார். லாஹூரிலுள்ள அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமில் ஓர் ஆசிரியராக அவர் இருந்தார். அவர் ஹுஸூர் (அலை) அவர்களின் உண்மை தொடர்பாக சியால்கோட்டைச் சார்ந்த மவ்லவி முஹம்மது அலி சாஹிபுடன் காஷ்மீரி பஸாரிலுள்ள ஒரு கடையில் நின்றவாறு முபாஹலா செய்தார். சில நாட்கள் கழிந்த பிறகு பிளேக் நோயால் இறந்து விட்டார். அவர் மட்டுமல்லாமல் அவரது மனைவியும் கூட பிளேக் நோயால் மரணித்து விட்டார். அக்கவுண்டென்ட் ஜெனரல் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த அவரது மருமகன் கூட பிளேக் நோயால் மரணமடைந்தார். இவ்வாறே அவரது குடும்பத்தைச் சார்ந்த 17 நபர்கள் முபாஹலா நடந்த பிறகு பிளேக் நோயால் அழிந்து விட்டனர்.

இம்மக்களின் எண்ணத்தில் நான் பொய்யனாகவும் இட்டுக்கட்டிக் கூறுபவனாகவும் தஜ்ஜாலாகவும் இருக்கின்றேன். ஆனால், முபாஹலா செய்யும்போது இம்மக்களே மரணிக்கின்றனர். இது வியக்கத்தக்க விஷயமாக இருக்கின்றது. எவராவது இந்த இரகசியத்தை புரிந்து கொள்ள முடியுமா என்ன ? இறைவனிடம் கூட இவ்விஷயத்தில் தவறாகப் புரிந்து கொள்ளும் நிலை ஏற்பட முடியுமா என்ன ? - நஊதுபில்லாஹ். அத்தகைய நல்ல மனிதர்கள் மீது இறைவனின் கோபம் ஏன் இறங்குகின்றது ? அதனால் மரணமும் நிகழ்ந்து விட்டது. மேலும், இழிவும் அவமானமும் கூட ஏற்பட்டு விட்டது.

மியான் மிஃராஜுத்தின் அவர்கள் எழுதுகின்றார்கள்: அவ்வாறே லாஹூரில் கரீம் பக்ஷ் என்ற பெயரில் ஒரு குத்தகைக்காரர் இருந்தார். அவர் ஹுஸூர் (அலை) அவர்கள் தொடர்பாக மிகவும் அவமரியாதையாகவும் இழிவாகவும் பேசி வந்தார். இவ்வாறு பலமுறை அவர் செய்து வந்தார். நான் பலமுறை அவருக்குப் புரிய வைத்தேன். ஆனால், அவ்வாறு செய்வதிலிருந்து அவர் விலகவில்லை. இறுதியில் வாலிப வயதில் அவர் மரணத்திற்கு இரையாகி விட்டார்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 235)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad